## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

01.11.2019 அனைத்து புனிதர்கள் விழா - திருப்பலி 02
02.11.2019 இறந்த அனைவரின் நினைவு விழா - திருப்பலி 03
03.11.2019 பொதுக்காலம் 31ம் ஞாயிறு - திருப்பலி 04
04.11.2019 புனித சார்லஸ் பொரோமெயோ- திருப்பலி 06
09.11.2019 இலாத்தரன் பெருங்கோயில் நேர்ந்தளிப்பு - திருப்பலி 07
10.11.2019 பொதுக்காலம் 32ம் ஞாயிறு - திருப்பலி 08
13.11.2019 அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி - திருப்பலி 09
15.11.2019 அருளாளர் மதலேனா மொரானோ - திருப்பலி 11
17.11.2019 பொதுக்காலம் 33ம் ஞாயிறு - திருப்பலி 12
18.11.2019 புனிதர்கள் பேதுரு,பவுல் பேராலயங்கள் நேர்ந்தளிப்பு-திருப்பலி 13
21.11.2019 கன்னி மரியா காணிக்கையாக அர்ப்பணிப்பு விழா-திருப்பலி 14
22.11.2019 புனித செசிலியா திருவிழா - திருப்பலி 16
24.11.2019 பொதுக்காலம் 34ம் ஞாயிறு,
கிறிஸ்து அரசர் பெருவிழா - திருப்பலி 17
30.11.2019 புனித அந்திரேயா திருத்தூதர் விழா - திருப்பலி 19

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

1. நல்லோரின் இறப்பு நிலை வாழ்வின் தொடக்கம் 20
2. அருளாளர் மதலேனா மொரானோ வாழ்வு தரும் பாடம் 22
3. புனித பேதுரு, புனித பவுல் பேராலயங்களின் சிறப்பு 25
4. திருஅவைச் செய்திகள் 28

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 01.11.2019 அனைத்து புனிதர்கள் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

I. திவெ. 7: 2-4, 9-14 II. 1யோவா. 3: 1-3 மத். 5: 1-12

ஆண்டவரில் அன்பும் நம்பிக்கையும் கொண்ட சகோதர சகோதரிகளே, இன்று அனைத்துப் புனிதர்களின் விழாவைக் கொண்டாட திருஅவை நம்மை அழைக்கிறது. இவ்விழா ஒரு நம்பிக்கையின் விழா. நம்பிக்கை அறிக்கையில் "புனிதர்களின் உறவு ஒன்றிப்பை நம்புகிறேன்" என்று அறிக்கையிடும் நாம் அதைக் கொண்டாடுவது சாலச் சிறந்ததே. நமக்கு முன்பு கடவுளை ஏற்று வாழ்ந்த குலமுதுவர்களும், இறைவாக்கினர்களும், திருத்தூதர்களும், புனிதர்களும், நீதிமான்களும் அனைத்து வானத்தூதர்களுடன் இறைவனை இடையராது புகழ்ந்து பாடி போற்றுகின்றனர். விண்ணகத்தில் இரவும் பகலும் மகிழ்ச்சிக் குரல் ஒலிக்கிறது. நாமும் ஒருநாள் அவர்களுடன் இணைவோம் என்பதே நமது விசுவாசம். வாழும்பொழுதும், இறப்புக்குப் பிறகும் தம் புதுமைகள், அருள் உதவியால் இயேசுவை வெளிப்படுத்துகிறவர்களே புனிதர்கள்.

கத்தோலிக்க மரபின்படி புனிதர்களுக்குக் காட்டும் வணக்கம் சாதாரண மரியாதை மட்டுமல்ல, சிறுசிறு நினைவு மன்றாட்டுக்கள் மட்டுமல்ல, அ.்.து ஆழ்ந்த நம்பிக்கையின் அடிப்படையில் அமைந்த ஞான உறவாகும். அவர்கள் நமக்குத் தந்துள்ள விலை மதிக்கப் பெறாத முன்மாதிரிகையும், பாடமும் மகிழ்ச்சியூட்டும் ஊக்க உதவிகளாகும். புனிதர்களின் பரிந்துரையை மேலான முறையில் நாம் விரும்ப வேண்டும். நமது மன்றாட்டினால் பெற முடியாத நன்மைகளை அவர்களின் உதவியினால் பெறலாம். இந்த உணர்வுகளோடு அனைத்து புனிதர்களோடும் சேர்ந்து இப்பலியை ஒப்புக்கொடுப்போம், புனிதர்களின் உறவில் ஒன்றிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எங்களை வழிநடத்துபவரே, புதிய ஒளி நோக்கி நடக்கும் எம் திருஅவைக்கும், அதன் பணியாளர்கள் அனைவருக்கும், உமது புனிதர்களின் தோழமையையும், அருள் வரங்களையும் தந்து உற்சாகத்துடன் விசுவாசப் பணிகளை மேற்கொள்ள அனைத்து புனிதர்களின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அருள் வழங்கும் வள்ளலே, நாட்டையாளும் தலைவர்களும், ஆட்சியாளர்களும், மக்களுக்கு எப்போதும் அறங்காவலர்களாக உண்மை ஒளியை நோக்கி நடத்தும் ஆற்றல் மிக்க தலைவர்களாக வாழ அனைத்து புனிதர்கள் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்கள் வாழ்வின் துணையாளரே, இங்கு கூடியுள்ள நாங்களும் எங்கள் குடும்பங்களும், பங்கு என்ற பெரிய குடும்பமும் அனைத்து புனிதர்களின் பரிந்துரையால் என்றும் விசுவாச ஒளிபெறவும், தீமைகள், நோய் நொடிகள் நீங்கி வளம்பெறவும் அனைத்து புனிதர்களின் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. துயர் துடைக்கும் தூயவரே, எம் பங்கிலும், உலகெங்கும் உள்ள ஏழைகள், விதவைகள், அனாதைகள், கைவிடப்பட்டோர், சிறைப்பட்டோர், முதுமை, பற்பல பிணிகளில் சிக்கி தவிப்போர் மற்றும் வறுமை, தனிமையில் வாடுவோர் அனைவரும் வாழ்வில் வளமும் நலமும் பெற அனைத்து புனிதர்கள் வழியாக இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 02.11.2019 இறந்த அனைவரின் நினைவு விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்

கிறிஸ்துவில் அன்பார்ந்த இறைமக்களே, இன்று திருஅவையானது இறந்த நம்பிக்கையாளர் அனைவரின் நினைவைக் கொண்டாடுகிறது. இந்த நாளை "கல்லறைத் திருவிழா" என்றே பொதுவாக நம் மக்கள் அழைக்கின்றனர். இறந்த நம்பிக்கையாளர்களை நினைவு கூறும் நற்பழக்கம் முதலில் துறவிகள் மத்தியில் ஆரம்பமானது. ஸ்பெயின் நாட்டில் புனித இசிதோர் என்பவர் தூய ஆவி பெருவிழாவை அடுத்து வந்த திங்கள்கிழமையை இறந்த நம்பிக்கையாளர் அனைவரின் நினைவு நாளாகக் கொண்டாடினார். 11ம் நூற்றாண்டில் புனித ஒதில்லோ நவம்பர் 2ம் நாளை இறந்த துறவியர் நாளாக ஒவ்வொரு துறவற சபைகளிலும் கொண்டாடும்படி பணித்தார். இது பிற்காலத்தில் இலத்தீன் திருஅவையால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இறந்தவர்களுக்காக செபிப்பதும், அவர்களின் பாவம் மன்னிக்கப்பட பலி செலுத்துவதும் ஆரம்ப காலத்திலிருந்தே நடைமுறையில் இருந்து வந்துள்ளதை 2மக் 12: 42-46ல் படிக்கின்றோம். இறந்தவர்களுக்காக நாம் செபிக்கின்றபோது அவர்களின் ஆன்மா இறைவனில் நித்திய இளைப்பாறுதல் அடையும், அவர்கள் செய்த பாவங்களுக்குப் பரிகாரம் கிடைக்கும் என்று நம்பினார்கள். அதுமட்டுமல்ல, இறந்தவர்கள் நமக்காக இறைவனிடம் பரிந்துபேசி, நாம் வாழ்வு பெற உதவி செய்வார்கள் என்று மிகுந்த உறுதியுடன் இருந்தார்கள். இறப்பு நமக்கு முடிவன்று, அது புதிய வாழ்வின் பிறப்பு என்பதை உணர்ந்து, நாம் வாழும்போதே இயேசுவைப்போல அடுத்தவர்கள் வாழ நன்மைகள் பல செய்ய இத்திருப்பலியில் வரம் கேட்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. "உயிர்ப்பும் உயிரும் நானே" என்று சொன்ன இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார்,

பொதுநிலையினர் ஆகியோரைப் பேணிக்காத்து, திருஅவையை வளர்ச்சிப் பாதையில் கொண்டுச் செல்ல தேவையான அனைத்து வரங்களையும் பொழிந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. உலக நாயகனே எம் இறைவா, நாட்டுத் தலைவர்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் மக்களை நல்வழியில் நடத்திச் செல்ல பரந்த மனதையும், தாராள குணத்தையும் அவர்களுக்கு அளித்து மக்களின் துயர் துடைப்பவர்களாக அவர்கள் வாழத் தேவையான ஞானத்தைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

3. எந்நாளும் எங்களைத் தேற்றுபவரே, எங்களுடைய வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள், துயரங்கள், பிரச்சனைகளிலிருந்து எங்களை விடுவிக்கவும், எங்கள் வாழ்வில் சந்தோஷமும், மகிழ்வும் ஏற்பட நீரே எங்களைக் காக்கும் தெய்வம் என்ற உணர்வினை எங்கள் மனதில் பதித்து உம்மை அதிகமாக அன்பு செய்யவும், நேசிக்கவும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. உயிர்ப்பும் உயிரும் நானே என்றுரைத்தவரே, அனைத்து ஆன்மாக்களுக்காக மன்றாடுகின்றோம். குறிப்பாக யாரும் நினையாத ஆன்மாக்களையும் நீர் கருணைக் கண்கொண்டு அவர்களுக்கு முடிவில்லா வான்வீட்டில் இடமளித்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 03.11.2019 பொதுக்காலம் 31ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. பி. விக்டர்

I. சாஞா 11: 22-12: 2 II. 2தெச 1: 11-2: 2 லூக் 19: 1-10

இறையேசுவில் பிரியமானவர்களே, நமது திருஅவை இன்று ஆண்டின் பொதுக்காலம் 31ம் ஞாயிறு திருப்பலிக்கு நம்மை அன்புடன் வரவேற்கிறது. "தன் ஒரே மகன்மீது நம்பிக்கைக் கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும்பொருட்டு அந்த மகனையே கையளிக்கும் அளவுக்கு கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்" (யோவா 3:16). கடவுள் தாம் படைத்த அனைத்தின்மீதும் அன்பு கூர்ந்தார். படைத்த எதையும், எவரையும் அவர் வெறுக்கவில்லை. மாறாக, தவறு செய்கிறவர்களைச் சிறிது சிறிதாகத் திருத்துகின்றார். பாவத்தை வெறுக்கிற இறைவன் பாவிகளை வெறுப்பதில்லை. ஆனால் அவர்கள் மனந்திருந்துவதற்கு வாய்ப்புகளை உருவாக்கித் தருகின்றார்.

பாவம் செய்து மக்களால் புறக்கணிக்கப்பட்ட சக்கேயு தன்னுடைய மனமாற்றத்திற்காக இயேசுவைக்காண விரைகின்றார். இயேசுவைப் பார்ப்பதற்காக அவர் எடுத்த முயற்சிகளை இன்றைய நற்செய்தி நமக்கு விரிவாக எடுத்துரைக்கின்றது. இயேசு எந்த வீட்டில் நுழைகிறாரோ,

எந்த வீட்டில் தங்குகிறாரோ அந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று. அந்த வீட்டிற்கு விடுதலை கிடைக்கிறது. பேதுருவின் வீட்டில் இயேசு தங்கினார், பேதுருவின் மாமியார் சுகமானார். இயேசு யாயிருவின் வீட்டில் நுழைந்தார், மரித்தப் அவரது மகள் உயிர் பெற்றாள். எம்மாவுஸ் நகரில் சீடர்களோடு இயேசு தங்கினார். இழந்துபோன அவர்களது நம்பிக்கை துளிர்விட்டது. விட்டுப்போன பணிக்குத் திரும்பி வந்தனர். கானாவூரில் திருமண வீட்டில் இயேசு தங்கினார். திருமண வீட்டாரின் அவமானத்தைத் துடைத்தெறிந்தார். அதுபோல சக்கேயுவின் வீட்டிலும் இயேசு தங்கினார். பாவியான சக்கேயு மனம் மாறினார். அவ்வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று.

இத்தகைய மனமாற்றமும், விடுதலையும், உடல் நலமும் நமக்கும் வேண்டுமென்றால் நம்மோடும் இயேசு தங்க வேண்டும். "நீங்கள் எனக்குள்ளும் என் வார்த்தைகள் உங்களுக்குள்ளும் இருந்தால் நாங்கள் வந்து உங்களில் குடியிருப்போம்" (யோவா 14: 23) என்கிறார். நாம் அவருக்குள்ளும், அவரது வார்த்தைகள் நமக்குள்ளும் இருக்கின்றனவா? இயேசு நம்மில் தங்கினால் மாற்றமுண்டு, எனவே அவர் நம்மில் தங்குவதற்குத் தடையாக உள்ள நமது பலவீனங்களை, குற்றச் செயல்களை விட்டு விடுவதாக வாக்களிப்போம். இயேசுவில் புதுவாழ்வு பெற இத்திருப்பலியில் இணைந்து மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எம்மையெல்லாம் வழிநடத்தும் இறைவா, இவ்வுலகில் உமது திருஅவையைச் சிறப்பாக வழிநடத்திவரும் எமது திருத்தந்தையை ஆசீர்வதியும். அவருக்கு நல்ல உடல்நலத்தையும், ஆயர்கள், குருக்கள், துறவிகள் உமது தூய ஆவியாரின் ஆலோசனைப்படி வழிநடக்கவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆளும் அதிகாரங்களை வழங்கும் இறைவா, எமது இந்திய நாட்டை ஆளும் தலைவர்களை, அரசு அதிகாரிகளை ஆளுகை செய்வீராக. மக்களின் நலன்களுக்காகத் தங்கள் பதவிகளைப் பயன்படுத்த வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாவிகளை அன்பு செய்யும் இறைவா, இறைமகன் இயேசு எங்களில் தங்கி எங்களது பலவீனங்களை, வெறுப்புணர்வுகளை, கோபங்களை கீழ்ப்படியாமைகளை மன்னிக்க முடியாதவைகளை எங்களிடமிருந்து அப்புறப்படுத்துவாராக. இயேசுவின் வருகையால் புதுவாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. எமக்குள்ளிருந்து எம்மை இயக்குகிற இறைவா, இத்திருப்பலியில் பங்குபெற்றுள்ள ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும். வியாதிகளோடு வந்திருப்போருக்கு சுகத்தையும் திருமண எதிர்ப்பார்ப்பில் இருக்கும்

பிள்ளைகளுக்கு ஏற்ற துணையையும், குழந்தை பாக்கியம் இல்லாதோருக்கு குழந்தைப் பாக்கியமும் தந்து குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் காண வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.11.2019 புனித சார்லஸ் பொரோமெயோ திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவின் இறை சமூகமே, "ஒவ்வொரு நாளையும் புதிய ஆர்வத்துடன் தொடங்கவும், நன்மை செய்ய மேலும் ஒரு நாளை கடவுள் தந்திருப்பதால் கடவுளின் பிரசன்னத்தில் வாழவும் கடவுளின் மாட்சிமையையும், பாவிகளின் ஈடேற்றத்தையுமே தேடவும் வேண்டும்" என புனித சார்லஸ் பொரோமெயோ கூறுகிறார்.

இன்றைய தினம் நம் திருஅவை புனித சார்லஸ் பொரோமெயோவின் நினைவு நாளைச் சிறப்பிக்க அழைக்கிறது. இவர் இத்தாலியில் பிறந்தவர். இளமையிலேயே குருத்துவத்தின் மகத்துவத்தை உணர்ந்து குருவானார். திருஅவையின் கோட்பாடுகளையும் நாட்டின் சட்டங்களையும் பயின்று அறிஞர் என்னும் பட்டத்தையும் பெற்றார். திருத்தந்தைக்கு மிக நெருங்கிய உறவினராக இருந்த படியால் "மிலான்" நகரின் பேராயராகவும் கர்தினாலாகவும் நியமிக்கப்பட்டபோது திருஅவைக்கு அதிக நலன்கள் ஏற்பட்டன. திருத்தந்தைக்கு மிகவும் உதவியாக இருந்தார். வருமானத்தில் தன் செலவுபோக மீதியை ஏழைகளுக்கு உதவினார். ஏழைகள்மீது மிகவும் அன்புகொண்டு அவர்களுக்காக உழைத்தார். "திரிதெந்தின்" பொதுச்சங்கம் வெற்றியுடன் முடிய பேருதவிகள் பல செய்தார். சங்கத்தின் தீர்மானங்களை தம் மறை மாவட்டத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்து பல சீர்த்திருத்தங்களைச் செய்தார்.

நாட்டில் கொள்ளை நோய் பரவியபோது நோயாளிகளுக்கும், சாகக் கிடந்தவர்களுக்கும் பல உதவிகள் புரிந்தார். தன் உடமைகளை அதற்காக கொடுத்து உதவினார். பல குருமடங்களை நிறுவி அவற்றிக்கு உதவிட ஒரு நூல் நிலையத்தையும் அமைத்தார். கத்தோலிக்க மறைக்கல்விக்கு அடித்தளமிட்டவரும் இவரே. இத்தகைய அருஞ்செயல்கள் செய்த இப்புனிதரைச் சிறப்பித்து, இவரைப்போல் ஆர்வம் நிறைந்த அருள்பணியாளர்கள் பெருக வேண்டும் என்று செபித்து இத்திருப்பலியில் சங்கமிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. திருஅவையின் நாயகனே இறைவா, எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர் மற்றும் பொதுநிலையினர் யாவரும் திருஅவையின் வளர்ச்சிக்கும், ஆக்கப்பணிகளுக்கும் ஆற்றிடும்

செயல்திட்டங்கள் இன்னும் அதிகரிக்கவும் உற்சாகத்துடன் இவர்கள் தங்களின் கடமைகளை உணர்ந்து செயல்படவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையின் வடிவே இறைவா, மருத்துவ மனைகளிலும், இல்லங்களிலும், இறக்கும் தருவாயில் உள்ளவர்களுக்கு உமது கருணையினால் அவர்களின் நோய்கள் குணமடையவும், மன அமைதியுடனும், தூய்மையுடனும் உம்மை வந்தடையவும் அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அனைவரையும் அன்பு செய்யும் இறைவா, குடும்பங்களில் உள்ளவர்கள் ஒருவருக்கொருவர் அன்புடன் வாழவும், வருங்கால இளைய தலைமுறையினரை உம் வழியில் நடத்திடத் தேவையான அனைத்து சக்தியையும் ஆற்றலையும் தந்தருளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 09.11.2019 இலாத்தரன் பெருங்கோயில் நேர்ந்தளிப்பு திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

உலகிலுள்ள ஆலயங்களுக்கெல்லாம் தாய் ஆலயமாக விளங்கும் இப்பேராலயம் மன்னர் கொன்ஸ்தான்தின் என்பவரால் எழுப்பப்பட்டது. மன்னருக்குத் திருத்தந்தை சில்வெஸ்டர் திருமுழுக்குக் கொடுத்த அதே இடத்தில் இவ்வாலயம் கட்டப்பட்டுள்ளது. ஏறத்தாழ ஓராயிரம் ஆண்டுகள் திருத்தந்தையர்கள் இவ்வாலயத்திற்கு அருகில் தங்கினார்கள். இவ்வாலயம் தீயினால் பாதிக்கப்பட்டு இப்போதுள்ள இதே பெயர் கொண்ட பேராலயமாக கி.பி. 16வது 17வது நூற்றாண்டுகளில் முழுமையடைந்தது. கி.பி. 4ம் நூற்றாண்டு முதல் 16ம் நூற்றாண்டுவரை இப்பேராலயத்தில் 5 பொதுச்சங்கங்கள் நடைபெற்றுள்ளன. ஆயர்கள் பேரவைகள் 20 நடைப்பெற்றுள்ளன. 12ம் நூற்றாண்டு முதல் "மீட்பின் பேராலயம்" என்று அழைக்கப்பட்ட பெயர் மாறி இப்போது திருமுழுக்கு யோவான் பெயரால், இப்பேராலயம் அழைக்கப்படுகிறது. இங்குதான் புனித பேதுரு, பவுல் இவர்களின் தலைகள் வெள்ளிப்பாத்திரங்களில் புனிதமாக வைக்கப்பட்டுள்ளன. மேலும் புடென்ஸ் என்பவரின் இல்லத்தில் புனித பேதுரு திருப்பலிக்குப் பயன்படுத்திய மரத்தினாலான பீடமும் வைக்கப்பட்டுள்ளது. கடைசி இராவுணவின்போது, இறைமகன் இயேசு பயன்படுத்திய மேசையும் இங்குதான் வைக்கப்பட்டுள்ளது.

இறைவனின் ஆலயத்தை அபிஷேகம் செய்வது தகுதியே. ஏனெனில் தேவாலயங்கள் இறைவனின் வீடு. செபத்தின் இடம், இறைவன் அங்கே வசிக்கிறார். அது அநேக வரங்களைப் பெற்றுக்கொள்ளும் இடம். எனவே நாம் ஆலயத்திற்குள் செல்லும்போதெல்லாம் திருப்பேழையில்

இயேசு உயிரோடு இருக்கிறார் என்பதை நினைவில் கொள்வோம். இவ்விழாவினைச் சிறப்பிக்கும் நாம், உண்மையான உயிருள்ள இறைவனின் ஆலயங்களாகத் திகழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவருக்கும் உடல் நலமும் ஆன்ம பலமும் தரவும், இவர்கள் என்றும் கடவுளின் புனித ஆலயமாக இருக்கவும், இறுதிவரை இப்புனித நிலையில் வாழவும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பே உருவான இறைவா, நீர் எங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்த பங்கு ஆலயத்திற்காகவும், பங்குத் தந்தையர்களுக்காகவும் நன்றி சொல்வதோடு, ஆலயத்திற்கு வரும் அனைவரும் இறைவனின் சாயல் என்றுணர்ந்து, ஒருவர் ஒருவரை ஏற்றுக்கொள்ளவும் அன்பு செய்யவும் வேண்டிய வரத்தை தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கமே உருவான இறைவா, திருமுழுக்கின்மூலம் உமது ஆலயங்களாக மாறிய நாங்கள் அனைவரும் என்றும் இறைவன் வாழும் புனித ஆலயமாக இருந்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. பாதுக்காப்பு அளிக்கும் இறைவா, ஆலயத்தின் சிறப்பைப்பற்றி செபிக்கும் இவ்வேளையில் கிறிஸ்தவ ஆலயங்கள் அழிக்கப்படுவதையும் உமது மக்கள் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். உமது மேலான அருட்கரத்தால் அவர்களுக்கு பாதுகாப்பளித்து உடனிருந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 10.11.2019 பொதுக்காலம் 32ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திருமதி. ராணிவில்சன்

I. 2மக் 7: 1-2, 9-14 II. 2தெச 2: 16, 3:5 லூக் 20: 27-38

இறை இயேசுவின் நம்பிக்கையில் வாழும் இனிய அன்பர்களே, சில வேளைகளில், சில நேரங்களில் நாம் ஒரு செயலைச் செய்ய திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும்போது இடையூறு சிறு தடங்கல், சறுக்கல் வந்து விட்டால் இது இப்படித்தான், நான்தான் கூறினேனே, நடக்காது, இயலாது என சோர்ந்து போய் கை கழுவி விடுவோம். இறைவனை நம்புவதை விடுத்து யாரோ சொன்னார்கள் என அங்கே, இங்கே போனால் குணமாகும் சரியாகும் என குருட்டு நம்பிக்கை வைத்து அலைவோம். திடமான உறுதியான நம்பிக்கை நம்மிடம் இல்லாமல் போகும். நெருக்கடி நேரத்தில் நம்பிக்கைக் குன்றிப் போகும். ஆனால் இன்றைய வாசகமும் நற்செய்தியும் நமக்குப் புது வலிமையும், உற்சாகமும், உறுதியும் தருவனவாக அமைகின்றன.

என் உயிர் போனாலும் என்ன நேர்ந்தாலும் பரவாயில்லை என்று தாயும் ஏழு சகோதரர்களும் எடுக்கின்ற முடிவு நம்மை திகைப்பிலும், ஆச்சரியத்திலும் ஆழ்த்துகிறது. அது மட்டுமல்ல, இவ்வுலக வாழ்வில் பல சந்தேகங்கள், குழப்பங்கள், சொர்க்கமா, நரகமா? நான் உயிர்ப்பேனா, நிலை வாழ்வு பெறுவேனா என்ற நமது நம்பிக்கையில் சலனம் ஏற்படுகிறது. நம்பிக்கைக்கு பங்கம் வருவிக்கின்ற அளவிற்கு நமது நம்பிக்கை தளரக் கூடாது. ஏனெனில் நம் ஆண்டவர் இறந்தோரின் கடவுள் அல்ல , மாறாக வாழ்வோரின் கடவுள் என்று நம் ஆண்டவர் இயேசுவே கூறுகிறார். ஆகவே நாம் இன்று உறுதியெடுப்போம். இறைவா எங்களுக்கு நம்பிக்கை குன்றும் போதெல்லாம் எங்களைத் திடப்படுத்தும் என மன்றாடி அதில் நீடித்து நிலைத்து வாழ வரமருள வேண்டி இத்திருப்பலியில் நாம் பக்தியோடு மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் திருஅவையின் வழிகாட்டிகள் அனைவரும் நம்பிக்கையில் தளர்ச்சியடையாமல் தம் பணிவாழ்வில் மேலும் உறுதி பெற்று மக்களையும் அதே நம்பிக்கையின் பாதையில் அனைவரையும் அழைத்துச் செல்லவும், போதுமான நல்ல உடல் உள்ள நலனை இவர்களுக்கு அளித்துக் காத்தருள் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணையே இறைவா, உம்மால் அழைக்கப்பட்டு பணி வாழ்விற்குத் தேர்ந்தெடுத்த எம் தாய் திருஅவையின் முன்னாள் திருத்தந்தையர்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், இருபால் துறவறத்தார் அனைவருக்கும் வான் வீட்டில் உம்மோடு நித்திய பேரின்ப வாழ்வில் பங்குகொள்ள வேண்டிய அருளினை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, எங்கள் குடும்பத்தில் மூதாதையர், பெற்றோர்கள், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்கள் பெற்ற நம்பிக்கை என்னும் இக்கொடையை மற்றவர்களுடன் பகிர்ந்து வாழும் நல்ல மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. எம்மை பெயர் சொல்லி அழைத்தவரே, எங்கள் அன்றாட வாழ்வில் நாங்கள் சந்திக்கின்ற சவால்களில் நிலைத்தடுமாறாமல், உம்மில் நம்பிக்கைக்கொண்டவர்களாகவும் அவற்றில் வெற்றியைக்கண்டிட ஆற்றலையும், திறமையையும் அளித்து காத்தருளவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.11.2019 அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

சகோதரர் ஆர்த்தெமெதே சாத்தி, தெற்கு இத்தாலியில் ரெஜியோ எமிலியா என்ற பகுதியில் பொரெத்தோ என்ற இடத்தில் 1880ம் ஆண்டு அக்டோபர் 12ம் நாள் பிறந்தார். உழைப்பாளிகளான சாத்தியின் பெற்றோர் 1897ம் ஆண்டு அர்ஜென்டினாவிலுள்ள பாஹியா பிலான்சாவில் குடியேறினர். தன் வீட்டிற்கு அருகில் இருந்த சலேசிய இல்லத்திற்கு அடிக்கடி சென்று வந்த சாத்தி, 1900ம் ஆண்டு சலேசிய பள்ளிக்கூடத்தில் சேர்ந்தார். இவர் 1902ம் ஆண்டில் எலும்புருக்கி நோயினால் தாக்கப்பட்ட போது சிகிச்சைக்காக வியட்மா என்ற மருத்துவமனையின் அனுமதிக்கப்பட்டார். அவர் நலம் பெற்றதும் தன் வாழ்வை நோயாளர்களின் நலனுக்காக அர்ப்பணித்தார். அருட்தந்தை இவாசியோவிற்குப் பிறகு இவரே மருத்துவமனையின் மருந்தகப் பொறுப்பாளரானார். மருத்துவமனையின் உணவு தயாரித்தல், மருந்து கொடுத்தல், சுத்தம் செய்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் அன்புடனும், மகிழ்ச்சியுடனும் செய்தார். "நோயாளிகளுக்குச் செய்ததையெல்லாம் எனக்கே செய்தீர்கள்" என்ற இயேசுவின் வார்த்தைகளை வாழ்வாக்கினார். அசைய முடியாமல் துன்பப்பட்ட நோயாளிகள் இவரது அசையா சொத்தானார்கள்.

இவர் 1950ம் ஆண்டு தனது 70ம் வயதில் புற்று நோயினால் தாக்கப்பட்டு 1951ம் ஆண்டு மார்ச் 15ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். இவருடைய உடல் வியட்னாமிலுள்ள சலேசிய சிற்றாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவருக்கு 2000ம் ஆண்டு ஏப்ரல் 14ம் நாள் அருளாளர் பட்டத்தை வழங்கினார்.இன்று இத்திருப்பலியில் கலந்துக்கொள்ளும் நாமும் இப்புனிதரின் வாழ்க்கையை கண்டு பாவித்து நற்பண்புகளோடு வாழும் வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. திருஅவையின் காலச்சுவடுகள் இயேசுவின் அறநெறிப்பாதைகளாக இருக்கவும் வலுவிழந்தோர், நோயுற்றோர், வசதியற்றோர் இவர்களுக்காக உழைக்கும் ஊழியர்களை திருஅவை பெற்றுக் கொள்ளவும் வரம் வேண்டி, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. தலைமைத்துவத்தின் தனிப்பெருமை, பணி பெறுவதன்று, பணி புரிவதே என்பதற்கேற்ப எங்கள் தலைவர்கள் அனைவரும் கொடுப்பதில் இன்பம் காணவும், மக்களின் தேவைகளையே பணியின் மையமாகக் கொள்ளவும், அமைதியின் தூதுவர்களாக வாழவும் வரம் வேண்டி, இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தியின் வாழ்வைப்போன்று பிறரன்புப் பணிபுரியும் அனைவரின் உள்ளங்களும் கிறிஸ்துவின் ஒளியால் நிரப்பப்படவும், வலுவிழந்தோர் வாழ்வைக் கண்டுகொள்ளவும், நோயுற்றோர் நலம்பெறவும், நம்பிக்கை இழந்தோர் என்றும் மனஉறுதி பெறவும் வரம் வேண்டி, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 15.11.2019 அருளாளர் மதலேனா மொரானோ திருப்பலி

**முன்னுரை** சலேசிய புனிதர்களின் திருப்பலிப் புத்தகம்

அருளாளர் மதலேனா மொரானோ 1847ம் ஆண்டு நவம்பர் 15ம் நாள் தூரின் மாநகரில் உள்ள கியேரி என்னும் கிராமத்தில் பிறந்தார். இவர் தன் இளம் வயதிலேயே தனது கிராமத்து சிறார்களுக்கு நற்போதனைகளைக் கற்றுக்கொடுத்தார். இதுவே பிற்காலத்தில் சலேசிய சபையில் இவர் ஆற்றிய ஆசிரியைப் பணிக்குப் பயிற்சியாக இருந்தது. தான் புதுநன்மை வாங்கிய நாளன்றே இறைவனுக்குத் தன்னையே அர்ப்பணிக்க வேண்டும் என்ற ஆர்வம் கொண்டிருந்தார். தொன் போஸ்கோவின் ஆலோசனைக்கு ஏற்ப இவர் 1879ம் ஆண்டு சலேசிய கன்னியர் சபையில் சேர்ந்தார். நிறைவாழ்வு பயணத்தில் தான் புனிதமாகும் வரை வாழ வேண்டும் என்று இறைவனிடம் மன்றாடினார்.

இவர் சிசில்கு என்ற தீவில் 1881ம் ஆண்டு இளையோருக்காக, குறிப்பாக உழைக்கும் இளம் பெண்களுக்காக கல்விப் பணியை ஆற்றினார். "ஒரு பார்வை மண்ணகத்தையும் பத்து பார்வைகள் விண்ணகத்தையும் நோக்கிய வண்ணம்" பயிலகங்கள், கல்விக்கூடங்கள், இளைஞர் மன்றங்கள், விடுதிகள் மற்றும் தையற் கூடங்களையும் தீவு முழுவதும் தொடங்கினார். இவர் சலேசிய மாநிலத் தலைவியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியபோது இவருடைய ஆன்ம தாகம், பணி ஆர்வம், தம் நிறுவனங்களில் உருவாக்கிய அன்பான சூழல் ஆகியவை பல இளம் பெண்களைத் துறவற வாழ்விற்குப் பெரிதும் தூண்டின. இவரது அருமையான மேய்ப்புப் பணியை பல்வேறு ஆயர்கள் பாராட்டி, தங்களது மறைமாவட்டங்களிலும் மறைக்கல்விப்பணி, மறைப்பரப்புப்பணி ஆகியவற்றை மேற்கொள்ள இவருக்கு அழைப்பு விடுத்தனர்.

இவர் கத்தானியா என்ற இடத்தில் இருக்கும்போது புற்று நோயினால் தாக்கப்பட்டு, 1908ம் ஆண்டு மார்ச் 26ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். "எனது சுயநலத்தினால் இறைவனுடைய திட்டத்திற்கு எதிராக ஒருபோதும் செயல்படமாட்டேன்" என்று இவர் எடுத்துக்கொண்ட தீர்மானத்தில் கடைசி வரைக்கும் உறுதியாக நிலைத்திருந்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 1994ம் ஆண்டு நவம்பர் 5ம் நாள் கத்தானியா என்ற நகரிலேயே அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரது பிறந்த நாளையே திருஅவை நினைவு நாளாகச் சிறப்பிக்கின்றது.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. மறை உண்மைகளாலும், அருள் அடையாளங்களாலும் புனிதமாகத் திகழும் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் அனைவரும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களுக்கு, தூய ஆவியால் நிறைக்கப்பெற்ற புனிதத்துவத்தை பிரதிபலிக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. அருளாளரான மதலேனா மொரானோவின் எடுத்துக்காட்டான வாழ்வினால் ஒவ்வொரு சலேசிய சகோதரியும் தங்களது அர்ப்பண வாழ்வின் நெறிமுறைகளுக்கு ஏற்ப பிரமாணிக்கமாக வாழ்ந்து, தாராள உள்ளத்தோடு இளையோருக்குப் பணி செய்ய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. உமது அரசைக் கட்டியெழுப்ப அர்ப்பணித்துக் கொண்ட மறைக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் மறைப்பரப்புப் பணியாளர்கள் தங்களையே உமது சேவையில் முழுமையாக அர்ப்பணித்து தங்களது போதனைகளையும், புனிதமான வாழ்வையும் ஒன்றிணைத்து உமக்குச் சான்று பகர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 17.11.2019 பொதுக்காலம் 33ம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. D.V.R. ராஜா

I. மலா 4: 1-2 II. 2தெச 3: 7-12 லூக் 21: 5-19

அன்பு இறைமக்களே, ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர்களின்மேல் நீதியின் சூரியன் உதிக்கச் செய்வேன், அவர் தம் சிறகுகளின் இடையே பாதுகாப்பை உணரச் செய்வேன் என்னும் இறைவார்த்தைகள் இன்றைய நற்செய்தி வாயிலாகத் தரப்பட்டுள்ளன. ஆனால் இறுதி நாள்களில் நிகழப்போகும் பயங்கரங்களையும் அறிகுறிகளையும் அவற்றிலிருந்து தப்பி வாழக்கூடிய வழிகளையும் இன்றைய வாசகங்கள் சிந்திக்க கடைப்பிடிக்கத் தரப்பட்டுள்ளன. மேலும் புனித பவுல், உழைக்காமல் சோம்பித் திரிந்து அடுத்தவர் வேலைகளில் அவசியமில்லாமல் தலையிடுபவர்களைக் கண்டிக்கிறார். உலகில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. கால சூழ்நிலைகளும், இயற்கை அழிவுகளான எதிர்பாராத மழை, வெள்ளம், புயல், நிலநடுக்கம், பனிப்பாறை உருகுதல், காடுகள் தீப்பற்றி எரிதல், மற்றும் நாட்டுக்கு நாடு போர், அணு ஆயுதங்களை குவித்து மனித உயிர்களுக்கு உத்திரவாதம் இல்லாத நிலை காணப்படுகிறது.

எனவே நாம் எல்லா இடர்பாடுகளிலிருந்தும் தப்பி வாழ இறைவனுக்கு அஞ்சி நடப்பதே ஏற்புடையது. அதுவே ஞானத்தின் துவக்கம். அவ்வாறு வாழும்போது ஆபத்து காலங்களில் எப்படி நடக்க வேண்டுமென்ற ஞானத்தையும் தெளிவையும் இறைவன் நமக்கு

அருளுவார். ஏனெனில் அவர் அனுமதியின்றி எதுவும் நிகழப்போவதில்லை என்ற வார்த்தைக்கேற்ப நாம் இறை நம்பிக்கையில் மனந்தளராமல் வாழ இத்திருப்பலியில் பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நல்லாயனே எம் இறைவா, எமது திருத்தந்தைக்கு நல்ல உடல் உள்ள நலனைத் தந்து ஆசீர்வதியும். அவருடன் பணிபுரியும் ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் உமது நலன்களால் நிரப்பி வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வல்லமை நிறைந்தவரே, ஆட்சியில் உள்ள அரசியல் தலைவர்கள் தங்கள் நிலையை அறிந்து எல்லா மக்களும் பயனடையும் செயல்களில் தங்களின் சேவையைத் தொடரவும், மக்களின் தேவைகளை அறிந்து உதவிபுரியும் நல்ல மனதினைத் தந்தருளும்படி உம்மை மன்றாடுகிறோம்.
3. நீதியின் இறைவா, எமது பங்குத் தந்தை முன்னெடுக்கும் முயற்சிகள் வெற்றியடையவும், அவர் தம் உடல் உள்ள நலனை இறைவன் தாமே பாதுகாத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. மகிமை நிறைந்தவரே, இளையோர் தங்கள் இலட்சியத்தை மனதில் கொண்டு பயணித்து வாழ்வில் உயர்வடையவும், இறைவனின் வார்த்தைக்கேற்ப வாழ்ந்து எல்லா நலன்களையும் பெறவும் வேண்டிய அருளினை அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 18.11.2019 புனித பேதுரு, பவுல் பெருங்கோயில் நேர்த்தளிப்பு திருப்பலி

**முன்னுரை** திருமதி. பத்மாவதி

இயேசு கிறிஸ்துவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று நமது திருஅவையானது புனித பேதுரு, புனித பவுல் ஆகியோரின் பேராலயங்களின் அர்ப்பணிப்பு விழாவைக் கொண்டாட நம்மை அழைக்கிறது. வத்திக்கான் மலையில் தலைகீழாக சிலுவையில் அறையுண்டு புனித பேதுரு மறைசாட்சியாக உயிர் நீத்தார். இவரது கல்லறைமீது சிறிய நினைவுத்தளம் ஒன்றை திருத்தந்தை புனித கிளீற்றஸ் (77-88) எழுப்பினார். புனித பேதுருவின் புனிதப் பொருட்கள் அங்கு வைக்கப்பட்டன. புனித பேதுரு மறைசாட்சியான இடத்திலிருந்து ஏழுமைல் தொலைவிலுள்ள ஒஸ்தியா பாதையில் சால்வியன் எனப்படும் இடத்தில் தலைவெட்டப்பட்டு புனித பவுல் மறைசாட்சியாக உயிர் துறந்தார். இவருடைய உடல் சால்வியனிலிருந்து இரண்டு மைல் தொலைவு தள்ளி லூசினா என்ற பெண்மணியின் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

புனித பேதுருவின் கல்லறைமீது பேரரசன் கான்ஸ்டன்டைன் 319ம் ஆண்டு பேராலயம் ஒன்று எழுப்பினார். காலப்போக்கில் இந்தப்

பேராலயம் இடிந்துவிழும் நிலையில் இருந்ததால் புதிய திருத்தலம் கட்டத் திருத்தந்தை இரண்டாம் ஜீலியஸ் 1506, ஏப்ரல் 18 அன்று அடிக்கல் நாட்டினார். திருத்தந்தை எட்டாம் அர்பன் 1626, நவம்பர் 18 அன்று புனிதப்படுத்தி அர்ப்பணித்தார். புனித பவுலின் கல்லறையிலும் திருத்தந்தை புனித கிளீற்றஸ் சிறிய நினைவுத்தளம் அமைத்திருந்தார். அதன்மேல் 324 ஆம் ஆண்டு பேரரசன் கான்ஸ்டான்டைன் பேராலயம் ஒன்றை எழுப்பினார். மதிலுக்கு வெளியே அமைந்திருந்த இவ்வாலயம் 1823ம் ஆண்டு தீக்கிரையானது. பெருமை மிகுந்த இப்பேராலயத்தைப் புதுப்பிக்க உலகம் முழுவதிலும் நன்கொடைகள் பெறப்பட்டன. இப்பேராலயத்தை திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் 1854ஆம் ஆண்டு டிசம்பர் 10 அன்று புனிதப்படுத்தி அர்ப்பணித்தார். இப்பேராலய அர்ப்பணிப்பு திருப்பலியில் கலந்துக்கொண்டு நாமும் இப்புனிதர்களைப்போல் வாழ்வில் இயேசுவின் சாட்சிகளாய் வாழ வரம் வேண்டி மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல தந்தையே, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள் அனைவரும் புனித பேதுரு, பவுல் போல் வாழ்வில் கடவுளின் திருவுளத்திற்கேற்ப மக்களை நேரிய பாதையில் வழிநடத்த வேண்டிய ஆற்றலையும் போதிய வலிமையையும் அவர்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. எல்லாம் வல்ல தந்தையே, எம் நாட்டை, மாநிலத்தை ஆளும் தலைவர்களை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். அவர்கள் தங்களது சுயநலத்தைப் பாராது, மக்களின் துன்பங்களையும், வேதனைகளையும் நீக்கி மக்களின் வாழ்வாதாரத்தைச் சீர்செய்து நீதியோடும், நேர்மையோடும் சிறந்த தலைவர்களாக பணிபுரிய அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. குணமளிக்கும் தந்தையே, எம் பங்கில் குடும்பங்களில் நோயின் கடுமையால் வாடும் உம் பிள்ளைகளைக் கண்ணோக்கும். அன்று உம்மை நோக்கி "தாவீதின் மகனே எனக்கு இரங்கும்" எனக் கூக்குரலிட்டவரை குணப்படுத்தியதுபோல எம் குறைகளை கேட்டு நிறைவேற்ற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 21.11.2019 கன்னி மரியா காணிக்கையாக அர்ப்பணிப்பு விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இறை இயேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, மரியாவின் தந்தை ஜோக்கிம், தாய் அன்னாள் தவப் பயனால் பெற்றெடுத்த அற்புதக் குழந்தை மரியாவை, பெற்றோரின் நேர்ச்சைப்படியும் யூதர்களின் வழக்கப்படியும் ஆலயப்பணிக்காக ஒப்புக்கொடுக்கின்றனர். இறைப்பாடல்,

திருவிவிலியம், கீழ்ப்படிதல், பிறரன்பு முதலிய தெய்வீகப் பண்புகளில் பயிற்சிப்பெற அர்ப்பணிக்கப்படுகிறார். இவ்விழா கி.பி.7ம் நூற்றாண்டில் தொடங்கி உலகமனைத்திலும் கொண்டாடப்பட்டு வருகிறது. மேலும் 11ம் நூற்றாண்டிலேயே மரியாவின் அமல உற்பவக் கொண்டாட்டம் வின்செஸ்டர் மற்றும் கேன்டர்பரியிலும் கொண்டாடினார்கள். "பாவமில்லாமல் பிறந்த மரியாவை அளவு கடந்த மரியாதையோடு பார்க்கிறேன்" என மார்ட்டின் லூத்தர் கூறுகிறார். லூக் 1:28ல் மரியாவை "அருள் நிறைந்த மரியே வாழ்க" என வானதூதர் கபிரியேல் மீட்பின் திட்டத்திற்காக வாழ்த்துகிறார். மரியா தாயின் கருவில் உருவான நேரத்திலிருந்தே பாவத்திலிருந்து இறையருளால் காப்பாற்றப்பட்டிருக்கிறார். "இயேசு கிறிஸ்துவின் மீட்பு, முன்கூட்டியே முதன் முதலாக மரியாவுக்கு, அவர் கருவான அந்த நேரத்திலேயே கொடுக்கப்பட்டு விட்டது" என்கிறார் விவிலியப் பேரறிஞர் ரேமண்ட் யி.பி. ரௌன். இறைவனின் அன்னை ஆலயத்தில் நுழைந்த விழா என்ற பெயரில் கிரேக்க மக்களால் கொண்டாடப்பட்டது. இறைவனின் திருவுளப்படி 6வயதில் தந்தை ஜோக்கிமுவையும், 8வயதில் தாய் அன்னாளையும் இழக்கின்றார் மரியா. 12வயது வரை ஆலயப்பணிகளில் பயிற்சிப் பெற்றபின் அவரது பாதுகாவலராக புனித சூசையப்பர் நியமிக்கப்படுகிறார்.

மரியாவை மீட்பின் தாயாக, புனிதமான உயிராகவே மதித்து வந்தனர் மக்கள். 5ம் நூற்றாண்டில் மரியாவைப் புதிய படைப்பாக களங்கமில்லாதவர், குறைகள் இல்லாதவர், உடலிலும் உள்ளத்திலும் தூயவர், பாவம் அவரில் எந்த வெற்றிடத்தையும் ஏற்படுத்த வில்லை என்று புகழ்ந்தனர். அதற்கு காரணம் மூன்று வயதிலேயே ஆலயத்தில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்டு, திருப்பணிகளில் இறைத்திருவுளத்தை நிறைவேற்றி, இயேசு கிறிஸ்துவின் மீட்புப் பணிக்குத் துணையாக, இணை இரட்சகியானார். நாமும் மரியாளைப்போல் குழந்தை உள்ளத்தோடு இறைத்திருவுளத்தை நிறைவேற்றி வாழ்வோம் என, பக்தியோடு இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அர்ப்பணத்தின் நாயகனே இறைவா, திருத்தந்தை பிரான்சிஸ் ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அர்ப்பண வாழ்வின் மேன்மையை உணர்ந்து வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தியாகமே உருவான இறைவா, பிறர் நலனுக்காக, மகிழ்வுக்காக, சமூக நீதிக்காக, நலிந்தோர் நல்வாழ்வுக்காக தன்னலம் கருதாது வாழ்ந்து காட்டிய மரியாவைப்போல் நாங்களும் எங்கள் வாழ்வில் தன்னலமற்றவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. தூயவரான எம் தந்தையே, அர்ப்பண வாழ்வு வாழ்ந்துக்கொண்டிருக்கும் துறவறத்தார் அனைவரையும் ஆசீர்வதித்து உமது அழைப்பில் நிலைத்து நிற்கும் வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 22.11.2019 புனித செசிலியா திருவிழா திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, புனித செசிலியா உரோமையில் பிறந்தவர். இளம் வயதிலிருந்தே தன் கன்னிமையை கடவுளுக்கு அர்ப்பணம் செய்திருந்தாள். இவர் எங்குச் சென்றாலும் நற்செய்தி நூலை எடுத்துச் செல்வார். எப்போதும் கைகளை விரித்து செபிக்கும் பழக்கத்தையும் முழு உடலையும் மூடும் அளவுக்கு உடையணியும் பழக்கத்தையும் பெற்றிருந்தாள். இப்புனிதையின் பெயராலே உரோமையில் 5வது நூற்றாண்டில் ஒரு பேராலயம் எழுப்பப்பட்டது. "புனித செசிலியாவின் திருப்பாடுகள்" என்னும் நூலின் காரணமாக இவரது பேரும் புகழும் நாற்றிசையிலும் விரைவில் பரவத் தொடங்கியது. மத்திய நூற்றாண்டுகளிலிருந்து "ஆலய கீதங்களுக்குப் பாதுகாவலி"யாக கருதப்பட்டாள்.

தனது வாழ்நாளெல்லாம் கன்னியாக வாழ்வதற்கு வார்த்தைப்பாடு கொடுத்திருந்த இவர் வலேரியன் என்ற வாலிபனை மணக்க நிர்ப்பந்தப்படுத்தப்பட்டாள். திருமணத்திற்கு பின் தன் கணவரிடம் "கடவுளின் தூதர் என்னை அன்பு செய்கிறார், அவரே எனது உடலை பாதுகாக்கிறார்" என்று கூறினாள். இதைக்கேட்ட வலேரியன் தானும் அந்தத் தூதரைக் காணவேண்டுமென்ற விருப்பத்தைக் கூறினார். செசிலியா அவரிடம் "தூதரைக் காண வேண்டுமென்றால் திருமுழுக்கு பெறவேண்டும்" எனக் கூறியதைக்கேட்ட வலேரியன் அந்நாட்களில் திருத்தந்தையாக இருந்த ஹர்பன் என்பவரிடம் திருமுழுக்குப் பெற்றார். பின் வீட்டையடைந்த வலேரியன் இப்புனிதையின் அருகில் தேவதூதர் இருப்பதைக் கண்டு திகிலுற்றார். இதனைக் கேள்வியுற்ற வலேரியனின் சகோதரன் திபூர்சியுசும் மனம் திரும்பினார். இதையறிந்த ஆளுநன் அல்மாக்கியஸ் இவர்களைச் சிறையில் அடைத்துக் கொல்லவும் ஆணைப் பிறப்பித்தான். பின்னர் செசிலி ஆளுநரிடம் அழைத்து வரப்பட்டாள். இயேசுவை மறுதலிக்கும்படி ஆணையிட்டான்.

இப்புனிதை மறுக்கவே இவருக்கு சித்தரவதை ஆரம்பமானது. கொலையாளி மும்முறை இவர் தலையை வெட்டியும் உயிர்போகாமல் இவரது உடலை இரத்த வெள்ளத்தில் மிதக்க விட்டான். இக்கொடூரமான நிலையிலும் மூன்று நாட்கள் உயிர் ஊசலாடியது. தனது இல்லம் எப்போதும் ஓர் ஆலயமாக அமையட்டும் என்று தனது இறுதி விருப்பத்தைத் தெரிவித்தார். இதுவும் நிறைவேறி தனது தூய ஆன்மாவை இறைவனிடம் கையளித்தார். இவரது முயற்சியால் தன் குடும்பத்தில் இருவர் இறைவனை அறிந்து

அவருக்காக உயிர்தியாகமும் செய்தனர். புனித செசிலியம்மாவின் பெயர் திருஅவையில் எப்பொழுதும் புகழ்பெற்று திருப்பலி செபங்களின்போது சொல்லப்படுகிறது. நாமும் நமது முன்மாதிரியான வாழ்வினால் இறைவனை அறியாதவர்கள் இறைவனிடம் நம்பிக்கையும், ஆறுதலும், பற்றும் பெறுபவர்களாகும் வரம்வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் என்றும் உமது அன்பையும், அருளையும் பெற்று தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட திருஅவையை நிலை வாழ்வுக்கு அழைத்துச் செல்லும் வரம் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒளியாம் இறைவா, திருஅவைக்கு இந்நாட்களில் ஏற்பட்டிருக்கும் நிலையை எதிர்கொள்ளும் திறமையையும் இயேசுவுக்காகச் சாட்சியாக வாழும் வரத்தையும், இயேசுவை ஏற்றுக்கொள்வதால் ஏற்படும் துன்பங்கள், கொடுமைகள் போன்ற இன்னல்களை ஏற்றுக்கொள்ளும் மனதையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பே உருவான இறைவா, நீர் எங்களுக்குக் கொடுத்திருக்கும் திறமைகளை வீணாக்காமல் உம்முடைய மகிமைக்காகப் பயன்படுத்தவும், கடவுள் நமக்குத் தந்துள்ள காவல் தூதர், புனித செசிலியம்மாவைப்போல புனிதப் பாதையில் நம்மை நடத்த வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.11.2019 பொதுக்காலம் 34ஆம் ஞாயிறு கிறிஸ்து அரசர் பெருவிழா

**முன்னுரை** திருமதி. ராணிசம்பந்தன்

I. 2சாமு 5: 1-3 II. கொலோ 1: 12-20 லூக் 23: 35-43

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்றைய வாசகங்கள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவே அரசர்கெல்லாம் அரசர் என்பதையே வலியுறுத்துகின்றன. இன்றைய முதல் வாசகத்தில் இயேசுவின் குல முன்னோரான அரசர் தாவீதை" போற்றி புகழ்ந்தப் பின்பு எபிரோனின் ஆண்டவர் திருமுன் தாவீது அரசர் அவர்களோடு உடன்படிக்கைச் செய்துக் கொண்டார். அவர்கள் இஸ்ரேயலின் அரசனாக தாவீதைத் திருப்பொழிவு செய்ததாகக் கூறப்படுகிறது. இரண்டாம் வாசகமான திருத்தூதர் பவுல் கொலோசியருக்கு எழுதிய திருமுகம் இயேசு கிறிஸ்துவோடு அனைத்தும், அனைத்து மக்களும் இணைந்து தம்மோடு ஒப்புரவாக்கவும் கடவுள் திருவுளம் கொண்டிருப்பதை வலியுறுத்துகிறது.

நற்செய்தியாளர் லூக்காவும் தன் நற்செய்தியில் இயேசு சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தபோது சிலுவையில் எழுதி வைக்கப்பட்ட வாசகமான "இவன் யூதரின் அரசன்" என்பதற்கேற்ப

படைவீரர்கள், ஆட்சியாளர்கள் அனைவரும் எள்ளி நகையாடியபோதும், அருகே சிலுவையில் தொங்கிய குற்றவாளி ஒருவன் கேலி செய்தபோதும், மற்றொரு குற்றவாளி "இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவில் கொள்ளும்" என்றபோதும், அதற்கு இயேசு, அவனிடம் "நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர்" என உறுதியாகச் சொல்கிறேன்" என்று உரைத்தபோதும் தான் உண்மையாகவே அரசர்க்கெல்லாம் அரசர் என்பதை உணர்த்துகிறார். ஆம். கிறிஸ்து அரசர் உண்மையில் அரசர்தான். அவரது ஆட்சி நீதியின் ஆட்சி. அவரது மக்கள் நேர்மையின் மக்கள், அவரது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றதன்று. அதற்கு முடிவே இராது. தான் அரசர் என்று சொல்லாத கிறிஸ்துவை அரசராகப் போற்றி திருஅவை இன்றைய தினத்தைக் கொண்டாடுகிறது. உண்மையை எடுத்துரைப்பதே என் பணி என்ற கிறிஸ்து அரசரின் வார்த்தைகளின் மகத்துவத்தை உணர்ந்து அவரது அரசில் பங்குகொள்ள உண்மையின் மக்களாக இருக்க வேண்டுமென்ற சிந்தனையோடு கிறிஸ்து அரசரைப் போற்றிப் புகழ்ந்து இத்திருப்பலியில் மகிழ்ந்து கொண்டாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. விண்ணையும் மண்ணையும் படைத்தாளும் அரசரே, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், கன்னியர், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்து அரசரைப் போற்றிப் புகழ்ந்து ஆராதித்து என்றென்றும் அவரது இறையாட்சியை உலகம் முழுமைக்கும் எடுத்துச்செல்ல தகுதியுள்ளவர்களாய் செயல்பட உம்மை மன்றாடுகிறோம்.

2. என்றென்றும் ஆட்சி செய்யும் கிறிஸ்து அரசரே, அரசியல் திட்டங்களினால் ஏற்படும் சுற்றுப்புற மாசு, தண்ணீர் பற்றாக்குறை, உடல் நல பாதிப்பு, விவசாய பாதிப்பு, விவசாய மக்களின் ஏமாற்றமான சூழ்நிலை இவைகளைக் கண்ணோக்கி, அவற்றிற்கான மாற்றுத் திட்டங்களை உருவாக்கி பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உண்மைக்குச் சான்று பகரும் கிறிஸ்து அரசரே, இயேசு கிறிஸ்துதான் இக்காலச் சூழலில் அரசர் என்பதை உணர்த்தும் வண்ணமாய் உமது நீதியின் நிழலில் கிறிஸ்தவர்கள்மீது நடைபெறும் பல வன்முறைகளைத் தட்டிக்கேட்கும் விதமாய் உமது மகத்துவத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. மன்னிக்கும் மனம் படைத்த கிறிஸ்து அரசரே, "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதை உணராமல் தன்னலத்துடன் பாவச் சூழலில் வீழ்ந்துக் கிடக்கும் மனித உள்ளங்களை மனம்மாறச் செய்து மன்னித்து வாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 30.11.2019 புனித அந்திரேயா திருத்தூதர் விழா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. யோசுவா 5: 9,10-12 II. 1கொரி 5: 17-21 லூக் 15: 1-3, 11-32

இறை இயேசுவில் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது திருத்தூதர் புனித அந்திரேயா விழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது. பெத்சாய்தாவில் வாழ்ந்து வந்த யோனாவின் மகன் தான் அந்திரேயா. கிரேக்க மொழியில் இவருடைய பெயருக்கு "ஆண்மையுடையவர்" என்று பொருள். இவரும் இவரது சகோதரர் சீமோன் பேதுருவும் தம் தந்தையுடன் இணைந்து கலிலேயக் கடலில் மீன்பிடித்து வாழ்ந்து வந்தார்கள். அந்திரேயா முதலில் திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்தார். ஒருமுறை இயேசு நடந்து செல்வதை திருமுழுக்கு யோவான் பார்த்தார். தம்முடன் இருந்த சீடர்களிடம் "இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி" என்று இயேசுவைத் தம் சீடர்களுக்கு அறிமுகம் செய்தார். உடனே அச்சீடர்கள் இயேசுவைப் பின்தொடர்ந்தார்கள்.

ஐந்து அப்பங்கள் இரண்டு மீன்கள் பெருகின அற்புதத்தின் அடிநாதமாக இருப்பவர் இந்த புனிதர். இயேசு கடலில் நடந்த அதிசயத்தைக் கண்டவர் இவர். இயேசு உயிர்த்த பிறகு ரஷ்யாவில் உள்ள சிந்தியா நாடு சென்று நற்செய்தி அறிவித்தார். இவர் ரஷ்யா நாட்டின் பாதுகாவலர். கிரேக்க நாட்டின் தென்பகுதியில் உள்ள பத்ரா பட்டணத்தின் ஆளுநன் ஏஜெடிஸ் என்பவனது மனைவி மாக்ஸி மில்லாவை இறப்பின் பிடியிலிருந்து காப்பாற்றினார். குணமானபின் மாக்ஸிமில்லா கிறிஸ்தவர் ஆனார். இதை ஏற்றுக்கொள்ள முடியாத ஆளுநன் ஏஜெடிஸ் இவரைக் கைது செய்து எக்ஸ் "ஓ" வடிவ சிலுவையில் அறைந்து கொன்றான். இந்தப் புனிதர் மீனவர்கள், வியாபாரிகள், இளம் பெண்கள், பாடகர்கள், தொண்டை நோயாளிகள், மணமாகாத பெண்கள் ஆகியோரின் பாதுகாவலர்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மண்ணுலகைப் பேணிக்காப்பவரே, குறிக்கப்பட்ட காலத்தில் உம்மால் தேர்ந்துக் கொள்ளப்பட்ட எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள், மற்றுமுள்ள துறவறத்தார்கள் உம்மோடும், உடனுள்ள அனைத்துப் புனிதர்களோடும் வானகப் பந்தியில் இடம் பெறும் வரமருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணைக் கடலே எம் இறைவா, நரைதிரை பருவங்களில் நலிவுற்று மரித்தவர்கள், பிணிகளின் தாக்கத்தில் எம்மைப் பிரிந்து சென்றிருப்பவர்கள், எதிர்பாராத விபத்திற்குள்ளாகி இறந்தவர்கள் அனைவரும் உமது வான்வீட்டில் உம்மோடு இறை இரக்கம் பெற வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எங்களை வழிநடத்தும் இறைவா, இறந்தவர்கள் எதையும் எடுத்துச்செல்வதில்லை என்பதை இறந்தவர்களைப் பார்த்து நாங்கள் கற்றுக்கொண்டு பிறருடைய சொத்துக்களை, பொருட்களை அபகரிக்கும் நோக்கத்தோடு அலையாமல், இருப்பதைக் கொண்டு நிறைவாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. நற்செய்தியின் நாயகனே இறைவா, திருத்தூதர்கள் விட்டுச்சென்ற நற்செய்தி அறிவிப்புப் பணியை திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் செய்ய கடமைப்பட்டவர்கள் என்று உணர்ந்து, உமது நற்செய்தி அறிவிக்கும் பணியைத் தொடர்ந்து செய்ய அருள்புரிய உம்மை மன்றாடுகிறோம்.

# பகுதி - 2: விசுவாசத்தில் வளர...

## நல்லோரின் இறப்பு நிலை வாழ்வின் தொடக்கம்

திரு. புல்லோன் ஜோ லூயிஸ்

மரணம், இறப்பு, சாவு.... பொதுவாக நாம் கேட்க விரும்பாத வார்த்தைகள் இவை. காண விரும்பாத நிகழ்வுகள் இவை. நாம் இப்பொழுது உயிர் வாழ்ந்துக்கொண்டிருக்கிறோம் என்பது எந்தளவுக்கு உண்மையோ, அந்தளவிற்கு ஒருநாள் நாம் மரிக்க வேண்டும் என்பதும் உண்மையே. இறப்பு அது ஒரு சிறப்பான மறைபொருளாய் நிற்கிறது. ஏனெனில் அதை அனுபவிக்க சாத்தியமில்லை. அதாவது மரணத்தோடு நாமும் மறைந்து போவதால் நம்மால் அதை அனுபவிக்கவோ மற்றவரோடு பகிர்ந்துக்கொள்ளவோ முடிவதில்லை. இறப்பு, அதுதான் எல்லா பயங்களுக்கும் அடிப்படை. இறப்பு இல்லையென்றால் பயம் என்பது இருக்காது. இறப்பு என்பது கடவுள்மீது நம்பிக்கைக் கொண்டவர்களையும் கூட பயமுறுத்துகிறது. ஏனெனில் இறப்பு என்றால் பிரிவு. ஒரு மனிதரின் வாழ்க்கையை அமைத்த ஆட்கள், அன்பு செய்தவர்களையும் பொருட்களையும் விட்டுச் செல்லும் நிலை. தன்னோடு எதுவும் இல்லாது தனியாகவே இருக்கும் சூழ்நிலையாகின்றது. ஆனால் நாம் மரணத்தைப் பார்த்து வித்தியாசமாக சிந்திக்க வேண்டும்.

மரணம் என்பது ஒரு அற்புதமான விஷயம். பல விஷயங்களை அது முடிவுக்குக் கொண்டு வருகிறது. தற்போது நாம் இருக்கும் நிலையில் அதை கொடுமையான விஷயம் என்று நினைக்கலாம். ஆனால் 1000 வருடங்கள் வாழக்கூடிய நிலையில் நாம் இருந்தால் மரணத்தை ஒரு விடுதலையாக நினைப்போம். நீண்டகாலம் இங்கே இருந்தோம் என்றால் நாம் எப்பொழுது கிளம்புவோம் என்று மற்றவர்கள் யோசிக்க ஆரம்பித்து விடுவார்கள். எனவே மரணம் என்பது ஒரு இழப்பு அல்ல, விடுதலையாகும், முடிவல்ல மற்றொரு வாழ்விற்கான அத்தியாயமாகும், ஆதாயமாகும். இந்த மரணம் இறைவனால் நமக்குக் கொடுக்கப்பட்டதல்ல, மனிதன்

இறைவனை மதிக்காமல் அவருக்குக் கீழ்ப்படியாமல் நடந்து சாவு என்கிற விளைவைத் தன்மேல் வரவழைத்துக்கொண்டான். மனிதன் மகிழ்வாக தூய்மையாக இருக்க வேண்டுமென்றுதான் இறைவன் சிங்கார வனத்தை அவனுக்கு ஏற்படுத்தித் தந்தார். ஆனால் தன்னுடைய கீழ்ப்படியாமையால் துன்பத்தை, கஷ்டத்தை, மரணத்தை வரவழைத்துக் கொண்டான். அன்று உருவானதுதான் நல்லோர் தீயோர் என்னும் நிலைப்பாடு. நல்லோர் என்று சொல்லும்போதே தீயோரும் உள்ளனர் என்பது தெள்ளத்தெளிவு. முதல் படைப்பின் படைப்புகளாம் காயின், ஆபேல் இவர்களில் ஆபேல் நல்லவனாயிருந்தான், காக்கப்பட்டான். கடவுள் ஆபேலின் இடத்தை நிரப்பும்படியாய் சேத்துவை அளிக்கிறார்.

மண்ணுலகில் மனிதர் செய்யும் தீமைகள் பெருகுவதையும், அவர்களின் சிந்தனைகளெல்லாம் தீமைகளை உண்டாக்குவதையும் கண்டார். நோவாவை ஒரு பெட்டகம் உருவாக்கச் சொல்லி, குற்றமற்றவரான நோவாவையும் அவரின் குடும்பத்தினரையும் அவர்களோடு ஊர்வன, பறப்பன, நடப்பன என அனைத்தையும் ஜோடி ஜோடியாக ஏற்றச் செய்து காப்பாற்றினார். மற்ற அனைவரையும், அனைத்தையும் வெள்ளப் பெருக்கினால் அழித்தார். சோதோம், கொமோராவுக்கு எதிராகப் பெருங்கண்டனக் குரல் எழும்பியுள்ளது. அவற்றின் பாவம் மிகவும் கொடியது. ஆண்டவரோ வானத்திலிருந்து சோதோம் கொமோரா நகர்களின்மேல் கந்தகமும், நெருப்பும் பொழியச் செய்து நகரில் வாழ்ந்தோரையும் நிலத்தில் தளிர்த்தவைகளையும் அழித்தார். இங்கே நல்லவன் சீலாத்தும் அவன் குடும்பத்தினரும் காப்பாற்றப்பட்டனர். ஆம் நல்லவர் எப்போதும் ஆண்டரின் கரங்களில். ஏழையின் உள்ளத்தோர், துயருறுவோர், கனிவுடையோர், அமைதி ஏற்படுத்துவோர், நீதிநிலை நாட்டுவோர், இரக்கமுடையோர், தூய்மையான உள்ளத்தோர், நீதியின் பொருட்டு துன்புறும் மனம் கொண்டோர், ஈவு இரக்கமற்ற செயல்கள், சுயநலம், தலைகனம் போன்ற தீய பண்புகள் இல்லாதோர் அனைவரையும் கடவுளின் மக்களாகப் பார்ப்பவர்கள், தம்மையே தூய்மையாக்கிக் கொண்டவர்கள். ஒடுக்கப்பட்டோர் என்று பார்க்காத எண்ணமுடையோர், எல்லோரும் என் சகோதர சகோதரிகள் என்ற புனிதப் பண்பைக் கொண்டவர்கள். இவர்களே நல்லோர், புனிதர்களின் பட்டியலில் அடங்குவர். இது கிறிஸ்தவர்களுக்கு மட்டும் உரித்தானதல்ல, உலக மக்கள் அனைவருக்கும் ஆண்டவர் அளிக்கும் உன்னதக் கொடை. நல்லோராம் இவர்கள் இவ்வுலகில் வாழ்ந்தபோது இறைச் சித்தத்தை மூலதனமாக்கி தரமான கிறிஸ்துவ வாழ்க்கை வாழ்ந்தால் இவர்களின் இறப்புநிலை வாழ்வின் தொடக்கம் எனும் கொடையைப் பெற்றவர்களாகின்றார்கள்.

தீயோர் இறைவனுக்கு எதிராக, இறைவார்த்தைக்கு எதிராக வாழ்பவர். நிலத்தை ஆளவேண்டியதை விடுத்து அழிக்கின்றனர். உலகைச் சண்டைப்போட்டு அணுகுண்டு போட்டு அழிக்கின்றனர்.

கடவுள் வாழும் இந்த நிலத்தை, இயேசு பிறந்து பண்படுத்திய பூமியை அழிக்கின்றனர். கடவுளின் சாயலாம் பிற மனிதர்களை நேசிக்காதவன், அவர்களைப் புரிந்துக்கொள்ளாதவன், அவர்களோடு வாழ்வதை விடுத்து அவர்களை அழிக்கத் துடிக்கிறவன், சாதி, மதம், இனம் என பிரித்து வாழ்வின் இன்பத்தைப் பகிராதவன், மனிதனை மனிதனாய்ப் பார்க்காது மனித நேயத்தின் பண்புகளை மாண்பினை அழிப்பவன், கொலை, கொள்ளை, ஊழல், தலைகனம் என அனைத்திலும் உயர்ந்து சுயநலத்தின் உருவமானவன். பெற்றோரை, பெரியோரை மதிக்காதவன், கீழ்ப்படியாதவன், மது மாது என இந்த வாழ்விலே மூழ்கி, மனித மாண்பினைக் கொச்சைப்படுத்துபவன் ஆகிய இவர்களே தீயோர்.

நல்லோர் தீயோர் இருவருக்கும் மரணம் என்பது பொதுவானதே. அது மாறாதது, இயற்கையானது. மறுத்தாலும் யாரையும் விடாது. இந்த மரணம் ஆன்மாக்களின் புறப்பாடாக அமைகின்றது. விருப்பும் வெறுப்பும் மரணத்திற்குக் கிடையாது. மரணம் அனைவருக்கும் பொதுவானது என்பது மட்டும் திண்ணம். ஆனால் எப்போது யார் வீட்டைத் தட்டும் என்பது யாருக்கும் தெரியாது. கிறிஸ்தவர்கள், சாவுக்குப்பின் மறுவாழ்வு உண்டு எனும் உண்மையை ஏற்கின்றனர். அவ்வாழ்வு இவ்வுலகில் வாழ்ந்த விதத்தைப் பொருத்துள்ளது என்று நம்புகின்றனர். எனவே நல்லது செய்தவர் நல்லவர், விண்ணகம் செல்வர். அதுவே நிலைவாழ்வின் தொடக்கம். தீய வாழ்வு நடத்தி மன்னிப்பு பெறாதவர் நரகத்தில் வீழ்த்தப்படுபவர் என்பது நம்பிக்கை. மேலும் கத்தோலிக்கத் திருஅவையின் போதனையில் விண்ணக மகிமைக்கும், நரகத் தண்டனைக்கும் இடையில் உத்தரிக்கும் நிலை ஒன்று உண்டு. அங்கு தூய்மையற்று பாவத்திற்காகப் பரிகாரம் தேடாதவர்கள் சுத்திகரிக்கப்பட்டு விண்ணகத்திற்குச் செல்வர் என்பது நம்பிக்கை.

தன்னை மறுத்தவனையே ஏற்றுக்கொண்ட இறைவன், தன்னை வாதைச் செய்த மானிடரை மன்னித்த இறைவன், மறையினை அழிக்கத் துணிந்தவனை ஆட்கொண்ட இறைவன் தன்னோடு சிலுவையில் தொங்கிய நல்லக் கள்ளன் மனம் வருந்தியவனாய் மன்னிப்பு கேட்ட நிலையில் நிலைவாழ்வைத் தந்த இறைவன் இந்தப் பாவிகளை மன்னிக்கமாட்டாரா? பொன்னைப்போல் புடமிடப்பட்டவராய் விண்ணகத்துக்கு அழைத்துச் செல்லமாட்டாரா? இறந்தோர் நினைவும் நம் முன்னோடிகளாம் அனைத்துப் புனிதர்களின் நினைவும் இணைந்து நம்மை இம்மாதத்திற்குள் வரவேற்கின்றன. இவ்விரண்டு நாட்களும் திருஅவையின் பாரம்பரியத்திற்கும் நம்பிக்கைக்கும் அடித்தளமாக உள்ளன. புனிதர்கள் என்பவர்கள் புண்ணியங்களைச் செய்து வாழ்ந்தவர்கள் என்று மட்டும் கொள்ள முடியாது. கடவுள்மீது பற்றுடையவர்களும், மனித நேயர்களும் புனிதர்களே. சாதாரண மனிதர்கள்தான் அசாதாரண மனிதர்களாகின்றனர். தங்கள் வாழ்வில் சரி என்பதைச் செய்தவர்கள்.

மனசாட்சியாய் துலங்கியவர்கள், மனிதர்களை நேசித்தவர்கள் எல்லோருமே புனிதர்கள். எனவே புனிதர்கள் விழா நம் அனைவரின் விழா. இவ்விழாவை நாம் அனைவரும் கொண்டாடலாம்.

அனைத்து ஆன்மாக்களின் நாளினை இறந்தோர் தினமாகவும் சிறப்பித்து வருகிறோம். இந்த நாள் கல்லறைத் திருநாள் என்றும் அழைக்கப்படுகிறது. நம்மை விட்டுப்பிரிந்த உற்றார் உறவினர், நண்பர்கள் நம்முடன் வாழ்ந்த காலத்தில் கொண்டிருந்த அன்பு, நமக்காகச் செய்த தியாகங்கள் இவற்றினை நினைத்து அவர்கள் நித்திய இளைப்பாற்றி அடைந்திட செபிப்போம். அவர்களது குற்றங்களையும் பாவங்களையும் நமது செபத்தால் இறைவன் மன்னித்து அவர்களுக்கு இளைப்பாறுதல் அளிக்க வேண்டுமென்று செபிப்போம். இந்த நம்பிக்கையின் அடிப்படையில் இந்த இரு நாட்கள் மட்டுமல்ல, எல்லா நாட்களிலும் சிறப்பான வகையில் திருவழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்று நமது குழந்தைகளுக்கும், இளைய தலைமுறையினருக்கும் இந்த நாட்களின் சிறப்பினை எடுத்துரைப்போம். புனிதர்களின் சமூக உறவையும், மரித்தோர்களின் மறுவுலக வாழ்வையும் உறுதியாக விசுவசிப்போம்.

## அருளாளர் மதலேனா மொரானோ வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

இந்த ஒரு அழகிய வரத்தை மட்டுமே இறைவனிடம் கேட்ட அற்புதரின் வாழ்வைப் பற்றி அறிந்து கொள்வதற்கு முன், சில முக்கிய வரலாற்று நிகழ்வுகளைத் தெரிந்துகொள்வது உகந்ததாக அமையும். "மார்நீஸ் திட்டக்குழு" சார்ந்தவர்கள் கியேரி என்னும் ஊருக்கு அரைநாள் சுற்றுலாச் சென்றார்கள். தொன் போஸ்கோ தனது 16 முதல் 26 வயது வரை (1831-1841) பத்து ஆண்டுகள் இந்த கியேரியில் வாழ்ந்திருந்தார். குறிப்பாக சலேசிய அருட்சகோதரிகளுக்கு கியேரி ஒரு மிகச் சிறப்பான அதிமுக்கியமான ஓர் ஊர் என்றே சொல்லவேண்டும். அங்கிருந்த பொதுமக்களின் விருப்பத்திற்கேற்ப சலேசிய கன்னியர் மடத்தை நிறுவவும், அதே சமயம் அவர்களிடையே மாதா பக்தியைப் பரப்பவும் கிறிஸ்தவர்களின் சகாய அன்னையின் அழகிய திருவுருவச் சிலையை அனுப்பினார் தொன் போஸ்கோ. அதனைத் தொடர்ந்து 1878ல் சலேசிய சகோதரிகளின் பணி கியேரியில் ஆரம்பமானது. அதுமட்டுமல்ல தொன் போஸ்கோவின் வழிகாட்டுதலில் ஒரு சலேசிய கன்னியராக தனது வாழ்வை அமைத்துக்கொண்ட அருளாளர் மதலேன் மொரானோ பிறந்தது இந்த கியேரியில்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

சலேசிய அருட்சகோதரிகள் (சகாய அன்னையின் புதல்வியர் சபை) சபையைச் சார்ந்த மதலேன் மொரானோ 1847ல் நவம்பர் 15ம் நாள் பிறந்தவர். 14 வயதிலேயே ஒரு பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றிய இவர் இயற்கையிலேயே நல்ல ஆசிரியைக்குரிய குணங்களைக்

கொண்டவராகத் திகழ்ந்தார். 17 வயதில் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டயத்தைப் பெற்ற ஆசிரியையாக நியமிக்கப்பட்டார். பங்கில் மறைக்கல்வி எடுப்பதிலும், பல்வேறு பக்த சபைகளுக்கு உதவுவதிலும் பெரும் பங்கு எடுத்தார் மதலேன். தன் தனிப்பட்ட வாழ்வில் ஒறுத்தலையும் மற்றவருக்கு உதவுவதையும் இறைவன் தந்த அழைப்பாக ஏற்று வாழ்ந்தார். தனக்கு 30 வயது நிரம்பியபோது, தன் சேமிப்பு அனைத்தையும் ஒன்று சேர்த்து தன் தாயிடம் தந்து, அவர் வெகு நாளாய் கண்ட கனவின் படி ஒரு இல்லம் அமைத்துக் கொள்ளச் சொன்னார். தாயின் மகிழ்ச்சி, மறைவதற்கு முன்பே மற்றொரு செய்தியைக் கூறினார் மதலேன். அதிர்ந்து போன தாய் மிக வருத்தமுற்றார். ஆனால் தன் அனுபவத்தில் முதிர்ந்த மகள் கூறுவதை அவளால் மறுக்க முடியவில்லை.

தன் அனுமதியையும் ஆசீரையும் வழங்கினார். மதலேன் தொன் போஸ்கோவைச் சந்தித்து பேசியபோது அவளிடமிருந்த அசாதாரண நற்குணங்களைக் கண்டுகொண்ட தொன் போஸ்கோ அவளது வயதுபற்றி எவ்வித கேள்வியும் எழுப்பாமல், சகாய அன்னையின் புதல்வியர் சபைக்கு ஆன்ம குருவாக இருந்த அருட்பணி.கலியேரோவிடம் மதலேனை அனுப்பினார். மதலேன் தனது 31ம் வயதில் சபையில் சேர முடிவெடுத்து, மிகுந்த மகிழ்ச்சியுற்றார். ஆனால் 12 ஆண்டுகளாய் அவருடன் வாழ்ந்த பங்கின் மக்கள் வருத்தத்தில் ஆழ்ந்தனர். அவர்களைப் போலவே அப்பங்கிற்கு 10 ஆண்டுகள் அங்கேயே பங்கு குருவாக இருந்த அருட்தந்தையும் மதலேன் செல்வதை எண்ணி மிகுந்த வேதனை அடைந்தார்.

மதலேன் 1879ல் முதல் துறவற வார்த்தைப்பாட்டை அளித்து சபையில் சகோதரியாக தன் வாழ்வினைத் தொடங்கினார். ஓராண்டிற்குள் 1880ல் தனது இறுதி வார்த்தைப்பாட்டையும் கொடுத்தார். அத்தருணத்தில் அவர் இறைவனிடம் கேட்ட ஒரு அழகிய வரம் இது : "இறைவா, நான் புனிதையாகும் முன் என்னைச் சாக விடாதேயும்" தொடர்ந்து 1881 முதல் 1885 வரை சிசிலி நகரிலே பணியாற்றியவர் 1885ல் தூரின் நகரிலிருந்த சலேசிய கன்னியரின் தலைமையகத்தின் தலைவியாக பொறுப்பேற்றார். அந்த பொறுப்பேற்று ஓராண்டு முடியும்முன் சில தவிர்க்கமுடியாத காரணங்களால் மீண்டும் சிசிலிக்கே செல்ல நேர்ந்தது. சிசிலி மாகாணத்திலிருந்த இல்லங்களுக்கு மாநிலத் தலைவியாகப் பணிபுரிய அழைக்கப்பெற்றார்.

சிசிலியில் 1881ல், அவர் செல்லும்போது 2 இல்லங்கள், 7 கன்னியர்கள், 2 துறவற மாணவிகள் என்றிருந்த நிலை 1908ல் மதலேன் இறந்தபோது 18 இல்லங்கள், 12 ஆரட்டரிகள், 6 பள்ளிகள், 5 ஆரம்பப் பள்ளிகள், 11 பயிற்சிக்கூடங்கள், 4 மாணவியர் விடுதிகள், 142 கன்னியர்கள், 29 துறவற மாணவியர்கள் என்று பிரம்மாண்டமான வளர்ச்சிக்கு உயர்ந்தது. எத்தனையோ எழுச்சிமிகு பணிகளைப்

புரிந்த அருட்சகோதரி மதலேன் மொரானோ, "என் பணி மறைக்கல்வி போதிப்பதே" என்று அடிக்கடி கூறுவார். மதலேன், 31 வயதில் துறவறத்தில் சேர முடிவு செய்த அவரது வாழ்வு இன்று, துறவறத்தில் இருப்போருக்கும் சரி, இல்லறத்தில் இருப்போருக்கும் சரி சமமான சவாலாக அமைகிறது என்பதே உண்மை. இல்லறத்தில் வாழும் பெண்கள் திருஅவையில் ஆற்றக் கூடிய ஆக்கப்பூர்வமான பணிகளைத் தன் வாழ்வினால் எடுத்தியம்பி, பின்னர் துறவறமும் சேர்ந்து அங்கும் ஒரு உண்மையான துறவி, வாழ வேண்டிய முறையை எடுத்துக் கூறும் உதாரணமான வாழ்வு வாழ்ந்துகாட்டினார். தலைமைத்துவத்தில் இருந்தும் கனிவான, பணிவான சகோதரியாய், புனிதையாய் வாழ்ந்தார். உண்மையிலேயே தான் செபித்தது போலவே புனிதையாக வாழ்ந்த பிறகே இறந்தார். இதை அங்கீகரித்து திருஅவை நவம்பர் 5, 2004ல் அவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தியது. விரைவில் இவர் புனிதராக அறிவிக்கப்படுவார் என்பதில் ஐயமில்லை.

## புனித பேதுரு, புனித பவுல் பேராலயங்களின் சிறப்பு

திரு. ஆக்னல் ஜோஸ்

அன்பார்ந்தவர்களே, கத்தோலிக்கத் திருஅவை நவம்பர் 18ந்தேதி புனித பேதுரு, புனித பவுல் பேராலயங்களின் நேர்ந்தளிப்பு விழாவைச் சிறப்பிக்கின்றது. திருத்தந்தைக்குரிய பேராலயங்களாக (பசிலிக்கா) உள்ள இவையிரண்டும், திருஅவையின் தூண்கள் என்று அழைக்கப்படும் இரு திருத்தூதர்களின் கல்லறைகள்மீது கட்டப்பட்டுள்ளன. வரலாற்று சிறப்பு மிகுந்த இந்தப் பேராலயங்கள், உலக மக்களை வெகுவாகக் கவர்ந்திழுக்கும் புகழ்பெற்றத் திருத்தலங்களாகத் திகழ்கின்றன. "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியைப் பறைச்சாற்றுங்கள்" என்ற இயேசு கிறிஸ்துவின் கட்டளையை ஏற்று, திருத்தூதர்கள் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் செய்து கிறிஸ்தவத்தை நிறுவினார்கள். அவர்களில் திருஅவையின் தலைவராக கிறிஸ்துவால் நியமிக்கப்பட்ட திருத்தூதர் பேதுருவும், புற இனத்தாருக்கு நற்செய்தி அறிவிக்க அழைப்பு பெற்ற திருத்தூதர் பவுலும் தனிச்சிறப்பு வாய்ந்தவர்கள். தங்கள் பலவீனங்களையும் மீறி கிறிஸ்துவின் நற்செய்திக்குச் சான்று பகர்வதில் உறுதியாய் நிலைத்திருந்தவர்கள்.

புனித பேதுருவும் பவுலும், தங்களது இறுதி நாட்களை ரோம் நகர மக்களுக்கு நற்செய்தி அறிவிப்பதில் செலவிட்டதாக திருஅவையின் மரபு கூறுகிறது. உரோமைப் பேரரசன் நீரோவின் காலத்தில் நிகழ்ந்த மறைக்கலகத்தில், இவர்கள் இருவரும் துன்புற்று மறைசாட்சி முடி பெற்றதாக வரலாற்று அறிஞர்கள் கணிக்கின்றனர். திருத்தூதர் பேதுரு, வத்திக்கான் குன்றின்மீது தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு கொல்லப்பட்டார். திருத்தூதர் பவுல், சால்வியன் பகுதியில் வாளால் தலை வெட்டப்பட்டு இறந்தார். வத்திக்கானில் திருத்தூதர் பேதுரு மற்றும் பவுலின் உடல்கள் புதைக்கப்பட்ட இடங்களில், திருத்தந்தை புனித அனகிளேத்துஸ்

கி.பி. 80களில் ஒரு நினைவிடம் எழுப்பினார். திருத்தூதர் பவுலின் உடல், உரோமையின் மதிலுக்கு வெளியே லூசினா என்ற பெண்மணிக்கு சொந்தமான இடத்தில் புதைக்கப்பட்டது. இவ்விரு திருத்தூதர்களின் கல்லறைகளும், தொடக்க காலம் முதலே கிறிஸ்தவர்களின் திருப்பயண இடங்களாக விளங்கி வருகின்றன.

3ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காயுஸ் என்ற குரு, "பேதுரு, பவுல் ஆகிய இரண்டு திருத்தூதர்களின் கல்லறைகளை என்னால் காட்ட முடியும். ஒன்று வத்திக்கான் குன்றில் இருக்கிறது, மற்றது ஓஸ்தியா பாதையில் இருக்கிறது. அங்கு சென்றால், திருஅவையின் நிறுவனர்கள் இருவரின் கல்லறைகளையும் கண்டுபிடிக்கலாம்" என்று கூறியதாக, வரலாற்று குறிப்புகள் உள்ளன. வத்திக்கானில் உள்ள புனித பேதுருவின் கல்லறைமீது கி.பி. 319க்கும் 333க்கும் இடைப்பட்ட காலத்தில் பேரரசர் கொன்ஸ்தாந்தின் பேராலயம் ஒன்றைக் கட்டியெழுப்பினார். அப்போது முதல் திருத்தந்தையின் முக்கியமான ஆலயமாக வத்திக்கான் புனித பேதுரு பேராலயம் விளங்குகிறது. 846ஆம் ஆண்டில் உரோமைக்கு எதிராகப் படையெடுத்து சென்ற இஸ்லாமியர், புனித பேதுருவின் கல்லறையை சேதப்படுத்தினர். இந்த பேராலயத்தில் முதல் பதினைந்து நூற்றாண்டுகளைச் சேர்ந்த 91 திருத்தந்தையரின் உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன.

14ஆம் நூற்றாண்டில் திருத்தந்தையரின் இருப்பிடமாக "அவிக்னன்" மாறியபோது, பழமை வாய்ந்த புனித பேதுரு பேராலயம் பராமரிப்பின்றி கைவிடப்பட்டது. இதன் விளைவாக பாழடைந்த பழைய பேராலயத்தை சீரமைத்து புதுப்பிக்க திருத்தந்தை 5ம் நிக்கோலஸ் ஏற்பாடு செய்தார். அந்த முயற்சி பலனுள்ளதாகத் தெரியாததால், தற்போதுள்ள புதிய பேராலயம் கட்டும் பணியை திருத்தந்தை 2ம் ஜூலியுஸ் 1505ல் தொடங்கி வைத்தார். புகழ்பெற்ற கலைஞர் மைக்கேல் ஆஞ்சலோவின் கைவண்ணம் இந்தப் பேராலயம் முழுவதும் பரவிக் காணப்படுகிறது. பெர்னீனியின் வெண்கலத் தூண்கள் கொண்ட மாடத்தின் நடுவில் பலிப்பீடம் உள்ளது. அப்பீடத்தின் கீழே புனித பேதுருவின் கல்லறை அமைந்துள்ளது. பேராலயத்தின் குவிமாடம் தரையிலிருந்து 448 அடி உயரத்தில் தனது உச்சியைக் கொண்டுள்ளது. புனித பேதுரு பேராலய வெளிமுற்றத்தில் டோரிக் கலைப்பாணியில் 4 வரிசை தூண்கள் கொண்ட மண்டபங்கள் வலப்புறமும் இடப்புறமும் அமைந்துள்ளன.

120 ஆண்டுகள் நடைபெற்ற கட்டுமானப் பணிகள், 1626ல் நிறைவடைந்தன. அதே ஆண்டு நவம்பர் 18ந்தேதி, திருத்தந்தை 8ம் ஹர்பானால் புதிய பேதுரு பேராலயம் நேர்ந்தளிக்கப்பட்டது. புகழ்பெற்ற முதல் மற்றும் இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கங்கள்

இந்தப் பேராலயத்திலேயே நடைபெற்றன. முக்கிய விழா நாட்கள் மற்றும் புனிதர்ப்பட்ட அறிவிப்பு திருப்பலிகளை திருத்தந்தை இந்தப் பேராலயத்திலேயே நிகழ்த்துகிறார். திருத்தந்தையின் புதன்கிழமை பொது மறைபோதகம், ஞாயிற்றுக்கிழமை நண்பகல் மூவேளை செபவுரை ஆகியவற்றைக் கேட்க, திருப்பயணிகள் இங்குள்ள சதுக்கத்திலேயே கூடுகின்றனர். ஒஸ்தியா நெடுஞ்சாலையில் உள்ள புனித பவுல் கல்லறைமீது கி.பி. 324ல் பேரரசர் கொன்ஸ்தாந்தின் ஆலயம் ஒன்றைக் கட்டியெழுப்பினார். உரோமைப் பேரரசர் தியோடேசியுஸ் காலத்தில் பேராலயமாக விரிவாக்கம் செய்யப்பட்டு, 402ஆம் ஆண்டில் திருத்தந்தை முதலாம் இன்னொசென்டால் நேர்ந்தளிக்கப்பட்டது. திருத்தந்தை புனித பெரிய கிரகோரியின் காலத்தில் இந்தப் பேராலயத்தில் புதிய பலிப்பீடம் அமைக்கப்பட்டது.

கி.பி. 846ல் ரோமுக்கு எதிராகப் படையெடுத்து சென்ற இஸ்லாமியர், புனித பவுல் பேராலயத்தையும் சேதப்படுத்தினர். இதையடுத்து திருத்தந்தை 8ம் யோவான் (-882), இந்தப் பேராலயத்தைச் சுற்றிலும் அரண் எழுப்பினார். 11ஆம் நூற்றாண்டில் பைசாந்திய கலை வேலைப்பாடுகள் கொண்ட வெண்கலக் கதவுகள் அமைக்கப்பட்டன. இங்குள்ள 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாஸ்கா மெழுகுத்தண்டு மிகவும் அழகானது. 1823ஆம் ஆண்டில் நிகழ்ந்த தீ விபத்தில் பழையப் பேராலயம் பெரிதளவு சேதம் அடைந்தது. இதையடுத்து, புனித பவுல் பேராலயத்தின் எஞ்சியப் பகுதிகளைச் சீரமைத்து பழைய வடிவிலேயே புதுப்பித்து கட்டியெழுப்பும் பணிகள் நடைபெற்றன. பலதரப்பினரின் நன்கொடைகளால் கட்டப்பட்ட புதிய பேராலயத்தை திருத்தந்தை 9ம் பயஸ் 1854ல் நேர்ந்தளித்தார். தூண்களைக் கொண்ட ஆலய மண்டபம் 1928ஆம் ஆண்டு முழுமை பெற்றது.

யூபிலி ஆண்டு கொண்டாட்ட வேளைகளில் திறக்கப்படும் புனித கதவுகள் இந்தப் பேராலயங்களின் தனிச்சிறப்பாக அமைந்துள்ளன. கிறிஸ்தவ விசுவாசத்தின் தூண்களாகத் திகழும் இரு புனிதர்களது பேராலயங்களின் நேர்ந்தளிப்பை திருஅவை ஒரே நாளில் கொண்டாடி மகிழ்கிறது. கத்தோலிக்கத் திருஅவையின் பெருமையாக விளங்கும் இந்தப் பேராலயங்கள், உலக முடிவு வரை பெருமை குன்றாமல் நிலைத்திருக்க மன்றாடுவோம். திருஅவையின் உறுப்பினர்களாகிய நாம், வாழும் கடவுளின் மக்கள் என்பதற்கு நமது செயல்களால் சான்று பகர்வோம். இயேசு கிறிஸ்துவை நற்கருணை வழியாக உடலிலும் உள்ளத்திலும் பெற்றுக்கொள்ளும் நாம், அவருக்கு உகந்த நற்கருணைப் பேழைகளாக வாழ முயற்சிப்போம். தூய ஆவியாரின் ஆலயங்களாக இருக்க அழைக்கப்பட்டுள்ள நாம் அனைவரும், கடவுளுக்கு மாட்சி அளிப்பவர்களாய் வாழ உறுதியேற்போம்.

# திருஅவைச் செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் ச.ச.,

"அன்பின் உண்மையான முகம் இரக்கம். அதைச் செயல்படுத்துகையில் நாம் இயேசுவின் சீடர்களாக மாறுகிறோம் மற்றும், அது இறைத்தந்தையின் இதயத்தையே காட்டுகின்றது"

- திருத்தந்தை பிரான்சிஸ்

## அமேசான் பற்றிய உலக ஆயர்கள் சிறப்பு மாமன்றம்

அமேசான் பற்றிய உலக ஆயர்கள் சிறப்பு மாமன்றம், வத்திக்கானில், அக்டோபர் 6ம் தேதி தொடங்கி, 27ம் தேதிவரை நடைபெறும். இதில் கலந்துகொள்ளும் 185 மாமன்ற பிரதிநிதிகளில், பெரும்பாலானவர்கள் ஆயர்கள் மற்றும் அருள்பணியாளர்கள். இவர்கள் அமேசான் பருவமழைக் காடுகளைக் கொண்ட பிரேசில், ஈக்குவதோர், வெனெசுவேலா, சுரினாம், பெரு, கொலம்பியா, பொலிவியா, கயானா மற்றும் ப்ரெஞ்ச் கயானா நாடுகளைச் சேர்ந்தவர்கள். ஐ.நா. நிறுவனத்தின் முன்னாள் பொதுச் செயலர் பான் கி மூன் அவர்களும் இம்மாமன்றத்தில் கலந்துக்கொள்வார். ஐ.நா. நிறுவன பொதுச் செயலர் ஒருவர் உலக ஆயர்கள் மாமன்றத்தில் பங்கு கொள்வது இதுவே முதன் முறையாகும்.

## 17 கிறிஸ்தவ ஆலயங்கள், ஓர் இந்து கோவிலுக்கு அதிகாரப்பூர்வ அனுமதி

ஐக்கிய அரபு அமீரகத்தில், சகிப்புத்தன்மை மற்றும் இஸ்லாம் அல்லாத பிற மதங்களுக்குத் திறந்தமனம் ஆகியவற்றின் முக்கிய அடையாளமாக, பல ஆண்டுகளுக்குமுன் கட்டப்பட்ட கிறிஸ்தவ ஆலயங்கள் உட்பட, 17 கிறிஸ்தவ வழிபாட்டுத்தலங்கள் மற்றும் ஓர் இந்து கோவிலுக்கு அந்நாட்டு அரசு அதிகாரப்பூர்வ அங்கீகாரம் வழங்கியுள்ளது. அமீரகத்தை அனைவருக்கும் உரிய இடமாக அமைக்கும் நோக்கில் அந்நாட்டின் பெருந்தலைவர்கள், பல ஆண்டுகளாக பல்வேறு மதங்களின் மக்களை நாட்டிற்குள் அனுமதித்தனர். தற்போது அபுதாபி, சகிப்புத்தன்மை மற்றும் நல்லிணக்கத்திற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்வதில் முன்னோடியாக உள்ளது என்று, அத்துறையின் தலைவர் முகீர் அல் கைலி அவர்கள் தெரிவித்தார். ஐக்கிய அரபு அமீரகத்தில் 1965ம் ஆண்டு அர்ச்சிக்கப்பட்ட புனித யோசேப் கத்தோலிக்க பேராலயம், அந்நாட்டிலுள்ள பழங்கால ஆலயங்களில் ஒன்றாகும்.

## இந்திய திருஅவையின் சவால்களுக்குத் தீர்வுகள் தேவை

இந்தியாவிலுள்ள திருஅவை தனது வசதியான வாழ்விலிருந்து வெளியேறவும், தனது தொடக்க கால மறைப்பணிமீது மீண்டும் கவனம் செலுத்தவும் விரும்பினால், அதன் அணுகுமுறையில் அடிப்படை மாற்றம் அவசியம் என்று, இந்திய கத்தோலிக்க அருள்பணியாளர் அவை (CPCI) கூறியுள்ளது. இந்தியாவில் 174 மறைமாவட்டங்களில், ஏறத்தாழ பத்தாயிரம் மறைமாவட்ட அருள்பணியாளர்கள் இறைப் பணியாற்றுகின்றனர்.

## சுடர் வாசகர் போட்டி - 64 சரியான விடைகள்

1. புனித பிரான்சிஸ் அசிசியார்
2. கும்பலாகச்....... வன்முறையை......
3. புனித யூதா ததேயு
4. "செபமாலை தீயவனின் சக்தியை விலக்கும்"
5. அருளாளர் மெர்வெல்லி
6. சுற்றுப்புறச் சூழலின் பாதுகாவலர்
7. நாம் பலவீனமான மனிதர்கள்........ வாழலாம்
8. குழந்தை இயேசுவின் புனித தெரேசா
9. புனித அவிலா தெரேசா
10. அருளாளர் தொன் மைக்கேல் ரூவா
11. நான் உங்களை......... அல்ல (யோவா 15:19)
12. திருத்தந்தை 5ஆம் பத்திநாதர்.
13. "இவர் வலிமையும்........ காணப்பட்டார்"
14. இயேசு - புனித அசிசியாரிடம் கூறியது
15. 24ஆம் வயதில் இறந்தார்

**குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்**

A. George Stephen, Villupuram

S. Antonysamy, Salem

I. Jean Roseline Manonmani, Thanjavour

## சுடர் வாசகர் போட்டி - 65

1. அருளாளர் ஆர்த்தெமெதே சாத்தி பிறந்தது எப்போது?
2. சிசில்கு தீவில் இளையோர் பணியாற்றிய அருளாளர் யார்?
3. புனித பேதுரு பேராலயத்தை 1854ஆம் ஆண்டு திறந்து வைத்தவர் யார்?
4. புனித செசிலியாவைப் பற்றிய புகழ்மிக்க நூல் எது?
5. ரஷ்ய நாட்டின் பாதுகாவலர் யார்?
6. "இறைவா நான் புனிதையாகும் முன் என்னைச் சாக விடாதேயும்" கூறியது யார்?
7. 17 கிறிஸ்தவ வழிபாட்டுத்தலங்களை அமைக்க அனுமதி அளித்த நாடு எது?
8. "எனது சுயநலத்தினால் இறைவனுடைய திட்டத்திற்கு எதிராக ஒரு போதும் செயல்படமாட்டேன்" கூறியவர் யார்?
9. வியட்னாமிலுள்ள சிற்றாலயத்தில் யாருடைய உடல் வைக்கப்பட்டுள்ளது?
10. கத்தோலிக்க மறைக்கல்விக்கு அடித்தளமிட்டவர் யார்?
11. உலக ஆயர்கள் மாமன்றத்தில் கலந்துக்கொள்ள இருக்கும் முன்னால் ஐ.நா. பொது செயலாளர் யார்?
12. அன்னை மரியாள் தனது எந்த வயதில் தாய் தந்தையை இழந்தார்?
13. புனித பேதுரு தலைகீழாக அறையப்பட்ட மலை எது?
14. புதுநன்மை வாங்கிய அன்றே தன்னை அர்ப்பணிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்ட அருளாளர் யார்?
15. கொன்ஸ்தாந்தின் மன்னருக்கு திருமுழுக்கு கொடுத்த திருத்தந்தை யார்?

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை நவம்பர் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

திருவருகைக் காலம் முதல் ஞாயிறு
புனித பிரான்சிஸ் சவேரியார்
அரு. பிலிப்பு ரெனால்டி
புனித நிக்கோலாஸ்
திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு
புனித கன்னிமரியா அமல உற்பவம்
குவாதலூப் அன்னை மரியா
திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு
திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு
கிறிஸ்து பிறப்பு பெருவிழா
புனித முடியப்பர்
புனித யோவான்
புனித மாசில்லாக் குழந்தைகள்
திருக்குடும்ப விழா ஞாயிறு

### பகுதி 2: விசுவாசத்தில் வளர...

குடும்பமாக வாழ அழைக்கும் இறைவன்
ஈடில்லா அருளாளர் பிலிப்பு ரினால்டி
திருவருகை காலத்தை எதிர்கொள்வது எப்படி
திருஅவைச் செய்திகள்


**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்:..................................
முகவரி:................................
..........................................
..........................................
..........................................

## நவம்பர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | வெ | **அனைத்து புனிதர்களின் விழா** | I. திவெ 7: 2-4,9-14<br>II. 1யோவா 3: 1-3 | மத் 5: 1-12 |
| 2 | ச | **இறந்த அனைவரின் நினைவு விழா** | II. சாஞா 3: 1-9<br>உரோ 5: 5-11 (அ) 6: 3-9 | லூக் 7: 11-17 (அ) யோவா 6: 37-40 |
| 3 | ஞா | **பொதுக்காலம் 31ம் ஞாயிறு** | I. சாஞா 11: 22-12: 2<br>II. 2தெச 1: 11-2: 2 | லூக் 19: 1-10 |
| 4 | தி | புனித சார்லஸ் பொரோமெயோ | உரோ 11: 29-36 | லூக் 14: 12-14 |
| 5 | செ | புனித பெர்டில்லா | உரோ 12: 5-16 | லூக் 14: 15-24 |
| 6 | பு | புனித லெயோனார்து | உரோ 13: 8-10 | லூக் 14: 25-33 |
| 7 | வி | புனித வில்பிரட் | உரோ 14: 7-12 | லூக் 15: 1-10 |
| 8 | வெ | முக்தி கோட்பிரீ | உரோ 15: 14-21 | லூக் 16: 1-8 |
| 9 | ச | **இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு** | எசே 47:1-2,8-9,12 | யோவா 2: 13-22 |
| 10 | ஞா | **பொதுக்காலம் 32ம் ஞாயிறு** | I. 2மக் 7: 1-2, 9-14<br>II. 2தெச 2: 16, 3:5 | லூக் 20: 27-38 |
| 11 | தி | தூர் நகர் புனித மார்ட்டின் | சாஞா 1: 1-7 | லூக் 17: 1-6 |
| 12 | செ | புனித ஜோசபாத் | சாஞா 2: 23-3:9 | லூக் 17: 7-10 |
| 13 | பு | புனித ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கோ | சாஞா 6: 1-11 | லூக் 17: 11-19 |
| 14 | வி | டப்லினின் புனித லாரன்ஸ் | சாஞா 7: 22-8:1 | லூக் 17: 20-25 |
| 15 | வெ | புனித பெரிய ஆல்பர்ட் | சாஞா 13: 1-9 | லூக் 17: 26-37 |
| 16 | ச | ஸ்காட்லாந்து நாட்டு புனித மார்கரெட் | சாஞா 18: 14-16, 19: 6-9 | லூக் 18: 1-8 |
| 17 | ஞா | **பொதுக்காலம் 33ம் ஞாயிறு** | I. மலா 4: 1-2<br>II. 2தெச 3: 7-12 | லூக் 21: 5-19 |
| 18 | தி | **புனிதர்கள் பேதுரு, பவுல் பெருங்கோயில் நேர்ந்தளிப்பு** | 1மக்1: 10-15, 41-43, 54-57, 62-64 | லூக் 18: 35-43 |
| 19 | செ | புனித கிகோரி | 2மக் 6: 18-31 | லூக் 19: 1-10 |
| 20 | பு | புனித பெலிக்ஸ் | 2மக் 7: 1, 20-31 | லூக் 19: 11-28 |
| 21 | வி | **புனித கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல்** | செக் 2: 14-17 | மத் 12: 46-50 |
| 22 | வெ | புனித செசிலியா | 1மக் 4: 36-37, 52-59 | லூக் 19: 45-48 |
| 23 | ச | புனித முதலாம் கிளமெண்ட் | 1மக் 6: 1-13 | லூக் 20: 27-40 |
| 24 | ஞா | **பொதுக்காலம் 24ம் ஞாயிறு, கிறிஸ்து அரசர் பெருவிழா** | I. 2சாமு 5: 1-3<br>II.கொலோ 1: 12-20 | லூக் 23: 35-43 |
| 25 | தி | அலெக்சாந்திரியா நகர்ப் புனித கத்தரின் | தானி 1: 1-6, 8-20 | லூக் 21: 1-4 |
| 26 | செ | அருளாளர் ஜேம்ஸ் அல்பெரியோலோ | தானி 2: 31-45 | லூக் 21: 5-11 |
| 27 | பு | புனித வெர்ஜீலியுஸ் | தானி 5:1-6, 13-14,16-17,23-28 | லூக் 21: 12-19 |
| 28 | வி | புனித கத்தரீன் லபூரே | தானி 6: 12-28 | லூக் 21: 20-28 |
| 29 | வெ | த கியுபெர்ட் | தானி 7: 2-14ற | லூக் 21: 29-33 |
| 30 | ச | புனித அந்திரேயா திருத்தூதர் விழா | உரோ 10: 9-18 | மத் 4: 18-22 |